

பேனாவின் பேரரசர்

பக்கம் 3

அஹ்மதிய்யத் உண்மை இஸ்லாம்

பக்கம் 8

காதியானும் அதன் புனித, வரலாறுச் சிறப்புமிக்க இடங்களும்

பக்கம் 13

மார்க்க அறிவுப் புத்தகம் – சிறுவர் பகுதி – (தொடர்–5)

பக்கம் 21

மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | March 2023 | Vol. 2 - Issue No. 4
Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340




"...எவரைப் பற்றி இன்றிலிருந்து 1300 ஆண்டுகளுக்கு முன்னரே ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் நற்செய்தி வழங்கி இருந்தார்களோ அவரும் நானே ஆவேன்."

(துத்கிரதுஷ் ஷஹாததைன். ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 4)



# திருக்குர்ஆன்

هُوَ الَّذِىْ بَعَثَ فِى الْاُمِّيّٖنَ رَسُوْلًا مِّنْهُمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ
وَيُزَكِّيْهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ ۚ وَاِنْ كَانُوْا
مِنْ قَبْلُ لَفِىْ ضَلٰلٍ مُّبِيْنٍ ۙ﴿٣﴾ وَّاٰخَرِيْنَ مِنْهُمْ
لَمَّا يَلْحَقُوْا بِهِمْ ؕ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿٤﴾

அவனே எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு – அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்தபோதிலும் – அவனது கட்டளைகளைப் படித்துக் காட்டி, அவர்களைத் தூய்மைப்படுத்தி, அவர்களுக்கு வேதத்தையும் நுட்பமான அறிவையும் கற்றுக் கொடுக்கும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பினான். மேலும் இதுவரை, அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்). அவன் வல்லமை மிக்கவனும் நுண்ணறிவுள்ளவனுமாவான். (62:3,4)



# ஹதீஸ்

عَنْ ثَوْبَانَ قَالَ قَالَ رَسُوْلُ اللهِ ﷺ
فَإِذَا رَأَيْتُمُوْهُ فَبَا يِعُوْهُ وَلَوْ حَبْوًا
عَلَى الثَّلْجِ فَإِنَّهٗ خَلِيْفَةُ اللهِ الْمَهْدِىْ

ஹஸ்ரத் தவ்பான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

“நீங்கள் மஹ்தியைக் கண்டால் அவரது கைகளில் பைஅத் செய்யுங்கள். பனிமலைகளை முழங்கால்களால் கடந்து செல்ல நேரிட்டாலும் அவரிடம் சென்று விடுங்கள். நிச்சயமாக அவர் அல்லாஹ்வின் கலீஃபாவாகவும் மஹ்தியாகவும் இருப்பார்.” (இப்னு மாஜா)




**A. நாஸிர் அஹ்மது**




எல்லாம் வல்ல இறைவன் எனக்கு ‘சுல்தானுல் கலம்’ (பேனாவின் பேரரசர்) எனப் பெயரிட்டுள்ளான் மேலும் எனது பேனாவை சுல்.ஃ.பிக்காரே அலீ (ஹஸ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் வாள்) என அழைத்துள்ளான்.

(தத்கிரா ஆங்கிலப் பதிப்பு பக்கம் 91)

இறுதிக் காலத்தில் தோன்றப் போகும் ஒரு சீர்திருத்தவாதியைக் குறித்த முன்னறிவிப்பு பெரும்பாலான மார்க்கங்களில் காணப்படுகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தியைக் குறித்து முன்னறிவித்துள்ளார்கள். இஸ்லாம் அனைத்து மார்க்கங்களின் மீதும் வெற்றி பெறும் என்ற திருக்குர்ஆனின் முன்னறிவிப்பும் (61:10) இமாம் மஹ்தியின் காலத்திலேயே நிறைவேற வேண்டியிருந்தது.

இறுதிக் காலத்தின் அடையாளங்களுள் ஒன்றாக திருக்குர்ஆன் சூரா தக்வீரில் இவ்வாறு கூறுகிறது:

وَإِذَا الصُّحُفُ نُشِرَتْ

புத்தகங்கள் விரிவாகப் பரப்பப்படும் (81:11)

மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இமாம் மஹ்தியின் தோற்றத்தைக் குறித்து இவ்வாறு கூறியுள்ளார்கள்:

وَيَضَعَ الْجِزْيَةَ، وَيَفِيضَ الْمَالُ حَتَّى لاَ يَقْبَلَهُ أَحَدٌ،

“அவர் மார்க்கப் போர்களை நிறுத்துவார். செல்வத்தை மிக அதிகமாக வாரி வழங்குவார். அதனைப் பெறுவதற்கு எவரும் இருக்க மாட்டார்கள்.”

(புகாரி, கிதாப் அஹாதீ அல்அன்பியா, எண். 3448)

மேற்கண்ட ஹதீஸிலிருந்து நமக்குத் தெரிய வருவது என்னவெனில், இமாம் மஹ்தியின் காலத்தில் மார்க்கப் போர்கள் நிறுத்தப்பட்டிருக்கும். எனவே வாள்களைக் கொண்டு செய்யப்படும் ஜிஹாதின் தேவையிருக்காது. ஆனால் பேனாவின் மூலமாக ஜிஹாது செய்ய வேண்டிய தேவையிருக்கும். இங்கு கூறப்பட்டுள்ள செல்வம் என்ற சொல் உலகச் செல்வங்களை அல்ல, மாறாக ஆன்மீக ஞானங்களையே குறிக்கின்றது. இமாம் மஹ்தி நீண்ட காலமாக மறைவாக இருந்த ஆன்மீக இரகசியங்களை எடுத்துரைப்பார். அதன் மூலம் இஸ்லாத்தின் அழகிய போதனைகள் மறுமலர்ச்சி பெறும். இந்த ஜிஹாதிற்காக இமாம் மஹ்தி பயன்படுத்த இருக்கும் ஆயுதம் பேனாவாகும்.

கி.பி 19 -ஆம் நூற்றாண்டில் இந்தியா மார்க்கங்களின் சந்தையாக விளங்கியது. இஸ்லாம் மார்க்கத்தின் உண்மைத் தன்மையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைத் தன்மையும் நாலாப் பக்ககங்களிலிருந்தும் தாக்குதல்களுக்கு ஆளாகியிருந்தது. இஸ்லாத்திற்கு எதிராக பல்வேறு நூற்கள் பரப்பப்பட்டன. இந்தத் தாக்குதல்களிலிருந்து இஸ்லாத்தைக் காப்பாற்ற முடியாத அளவிற்கு முஸ்லிம்கள் பலவீனமாக இருந்தனர். அவர்களின் எதிர்வினைகள் பொருத்தமற்றதாகவும் இஸ்லாத்திற்கு மேலும் களங்கம் தரும் விதத்திலும் அமைந்திருந்தன. இவ்வாறு இஸ்லாம் இறை ஆதரவற்ற ஒரு மார்க்கம் போல் காட்சியளித்தது.

இந்தக் காலக்கட்டத்தில்தான் அல்லாஹ்வின் கட்டளையின்படியும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கு ஏற்பவும் இமாம் மஹ்தியாகவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் தாம் தோன்றியிருப்பதாக ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் (1835 - 1908) அறிவித்தார்கள்.

அன்னார் ஒரு கவிதையில் கூறினார்கள்:

وہ خزائن جو ہزاروں سال سے مدفون تھے
اَب مَیں دیتا ہوں اگر کوئی مِلے اُمیدوار

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் மறைந்திருந்த பொக்கிஷங்கள்! அவற்றை நான் விரும்புபவர்களுக்காக விநியோகம் செய்கின்றேன்.

(பராஹீனே அஹ்மதிய்யா, பாகம் 5, ரூஹானி கஸாயின் தொகுதி 21, பக்கம் 147)

இது தொடர்பாக அன்னார் கூறுகிறார்கள்:

இந்த மறைந்திருக்கும் பொக்கிஷங்களை நான் உலகுக்கு வெளிப்படுத்தவும், இந்த ஒளிரும் ரத்தினங்கள் மீது படிந்திருக்கும் தூய்மையற்ற குற்றச்சாட்டுகளின் அசுத்தங்களை அகற்றி அவற்றை சுத்தப்படுத்தவும் எல்லாம் வல்ல இறைவன் என்னை நியமித்துள்ளான். திருக்குர்ஆனை மேன்மைப்படுத்தி, ஒவ்வொரு தீய எதிரிகளாலும் கூறப்படும் ஆட்சேபனைகளிலிருந்து அதனை விடுவிப்பதற்காக, எல்லாம் வல்ல இறைவனின் ரோஷம் இந்த நேரத்தில் தீவிரமாக எழுந்துள்ளது. எனவே, நமது எதிரிகள் இஸ்லாத்தைப் பேனாவால் தாக்க முற்படும் வேளையில் - உண்மையில் அவர்கள் அவ்வாறே செய்கிறார்கள் - அவர்களுக்கு எதிராக பௌதீகரீதியான போரில் ஈடுபட நாம் தயாராகி வருவது எவ்வளவு முட்டாள்தனமாக இருக்கும்?

(மல்ஃபூஸாத் ஆங்கிலப் பதிப்பு, தொகுதி 1, பக்கம் 59)

“இந்த யுத்தத்தில் வாள் அல்ல, பேனாதான் தேவை என்பதை உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். நமது எதிரிகள் இஸ்லாத்தின் மீது சந்தேகங்களைப் பரப்பி, பல்வேறு விஞ்ஞானங்கள் மற்றும் உத்திகள் மூலம் அல்லாஹ் அனுப்பியுள்ள உண்மையான மார்க்கத்தின் மீது தாக்குதல் நடத்த முற்பட்டுள்ளனர். இவ்வாறாக, அறிவியல் மற்றும் கல்வி முன்னேற்றம் என்ற இந்தப் போர்க்களத்தில் இலக்கிய ஆயுதக் களஞ்சியத்துடன் பிரவேசிக்கவும், இஸ்லாத்தின் ஆன்மீக மகத்துவத்தை வெளிப்படுத்தவும், அதன் உள் வலிமையின் அற்புதத்தை வெளிப்படுத்தவும் நான் இறைவனால் அனுப்பப்பட்டுள்ளேன். இந்தப் போர்க்களத்தில் நான் எப்படி நுழைய முடிந்தது? எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளினாலும், அவனது அளவற்ற கருணையினாலும் தான், என்னைப் போன்ற ஒரு தாழ்மையான மனிதனின் கைகளில் அவன் தனது மார்க்கத்தின் மேன்மையை வெளிப்படுத்த விரும்புகிறான்.

(மல்ஃபூஸாத் [ஆங்கிலம்], தொகுதி 1, பக்கம் 58)

“இஸ்லாம் ஒரு தூய்மையான மற்றும் குறைபாடற்ற மார்க்கம் ஆகும். இருப்பினும், தூய நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக இழிவான அவதூறுகள் நிறைந்த இலட்சக்கணக்கான புத்தகங்கள் எழுதப்பட்டிருக்கும் வகையில் அது தாக்கப்பட்டுள்ளது. சில பத்திரிகைகள் இலட்சக்கணக்கில் அச்சிடப்படுகின்றன. இஸ்லாத்திற்கு எதிராக எழுதப்பட்ட அனைத்தையும் ஒரே இடத்தில் சேர்த்தால் அது மிகப்பெரிய மலையாக உருவாகும்.

“முஸ்லிம்களின் நிலை என்னவெனில், அவர்கள் உயிரற்றவர்களாகவும், பிணங்களைப் போலவும் ஆகி விட்டனர். இந்த சமயத்தில் இறைவனும் மவுனமாக இருந்து விட்டால், அதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதை கற்பனை செய்து பார்க்க முடியும். சர்வ வல்லமையுள்ள இறைவனின் ஓர் அடி, மனிதனின் ஆயிரம் தாக்குதல்களைக் காட்டிலும் மிகப் பெரியது, அவனுடைய மார்க்கம் அனைத்து மார்க்கங்களின் மீது வெற்றி பெற இந்த ஓர் அடி மட்டுமே போதுமானது. (மல்ஃபூஸாத் [ஆங்கிலம்] தொகுதி 8, பக்கம். 174-175)

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

بَعَثَ اللهُ الْمَسِيحَ ابْنَ مَرْيَمَ فَيَنْزِلُ عِنْدَ الْمَنَارَةِ الْبَيْضَاءِ شَرْقِيَّ دِمَشْقَ بَيْنَ
مَهْرُودَتَيْنِ وَاضِعًا كَفَّيْهِ عَلَى أَجْنِحَةِ مَلَكَيْنِ

அல்லாஹ் மர்யமின் மகன் ஈஸாவை அனுப்புவான். அவர் லேசாக சாயம் பூசப்பட்ட இரண்டு மஞ்சள் நிற ஆடைகளை அணிந்து கொண்டு, இரண்டு வானவர்களின் இறக்கைகளில் கைகளை வைத்தவாறு டமாஸ்கஸின் கிழக்கே உள்ள வெள்ளை மினாராவில் இறங்குவார்.”

(முஸ்லிம், கிதாபுல் ஃபிதன், ஹதீஸ் 2937)

இந்த ஹதீஸைக் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் (அலை) இவ்வாறு கூறுகிறார்கள்:

இதில் கூறப்பட்டுள்ள இரண்டு வானவர்கள் மறைவான இரண்டு ஆதரவுகளை அடையாளப்படுத்துகின்றனர். அவற்றின் மீது அவரது வாதத்தின் மறுக்க முடியாத சான்றுகள் அமைந்திருக்கும்.

1. பகுத்தறிவு மற்றும் ஆதாரங்களின் அடிப்படையிலான மறுக்க முடியாத சான்றுகள் தொடர்பான அறிவு. இந்த அறிவு அவர் தரப்பில் எந்த முயற்சியும் உழைப்பும் இல்லாமலேயே அவருக்கு வழங்கப்படும்.

2. இரண்டாவதாக, எந்த மனித தலையீடும் இல்லாமல் இறைவனால் வழங்கப்படும் அடையாளங்கள் மூலம் வெளிப்படும் மறுக்க முடியாத சான்றுகள்.

(ஹகீகத்துல் வஹீ [ஆங்கிலம்], பக்கம் 388)





ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சுமார் 85 நூற்களை எழுதியுள்ளாரகள், அவை ரூஹானி கஸாயின் என்ற தலைப்பில் 23 தொகுதிகளாக தொகுக்கப்பட்டுள்ளன. அவர்களது சொற்பொழிவுகள் மல்ஃபூஸாத் என்றும், அறிவிப்புகள் மஜ்முஆ இஷ்திஹாரத் என்ற பெயரிலும் தொகுக்கப்பட்டுள்ளன. அவர்களது உருது கவிதைகளின் தொகுப்பு துர்ரே ஸமீன் என்று பெயரிடப்பட்டது. அதே நேரத்தில் அவரது பாரசீக கவிதைகள் துர்ரே ஸமீன் ஃபார்சி என்ற பெயரில் வெளியிடப்பட்டது. அவர்களது வாதத்திற்கு முன்னர் அவர்கள் எழுதிய கவிதைகளின் தொகுப்பின் பெயர் துர்ரே மக்னூன் ஆகும். இது கலாமே அஹ்மத் என்றும் அழைக்கப்படுகிறது. அன்னாருடைய அரபுக் கவிதைகள் அல்-கஸாயித்-உல்-அஹ்மதிய்யா என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளன.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மார்க்க சேவை குறித்து மவ்லானா அபுல்கலாம் ஆஸாத்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மரணத்தை ஒட்டி புகழ்பெற்ற அறிஞர் அபுல்கலாம் ஆஸாத் தமது வகீல் என்னும் 'பத்திரிகையின் தலையங்கத்தில் இவ்வாறு எழுதினார்:

“இந்த மனிதர் - மிக முக்கியமான பிரமுகர் - அவரது பேனா ஓர் அற்புதம் ஆகும். அவரது குரல் மந்திரம் ஆகும். அவர் பெரிய அறிவுசார் அதிசயங்களின் நினைவுச் சின்னமாக இருந்தார். அவரது நுண்ணறிவு புரட்சிகரமானது. மேலும் அவரது குரல் நியாயத்தீர்ப்பிற்கான அழைப்பைப் போன்று மின்னூட்டம் பெற்றிருந்தது. அவரது விரல்கள் சீர்திருத்தத்தின் சரங்களை நகர்த்தின. மேலும் அவரது இரண்டு மணிக்கட்டுகள் இடி மின்னலை உருவாக்கின. முப்பது வருடங்களாக மார்க்க அதிர்ச்சி அலைகளின் மையமாக விளங்கி, உறங்கிக் கொண்டிருந்த உலக ஆன்மாக்களைத் தனது இடி முழக்கங்களால் எழுப்பியவர்.....




இஸ்லாமிய எதிர்ப்பாளர்களுக்கு எதிராக எப்போதும் வெற்றிபெறும் தளபதியாக சேவையாற்றியவர். அவரது இந்த தனிச்சிறப்பு, நமது எதிரிகளை சின்னாபின்னமாக்கி அழித்த கம்பீரமான அவரது இயக்கம் எதிர்காலத்திலும் நீண்ட காலமாக தொடர வேண்டும் என்று வெளிப்படையாகவும் உண்மையாகவும் விரும்புவதைத் தூண்டுகிறது.

கிறித்தவர்கள் மற்றும் ஆரியர்களுக்கு எதிராக மிர்ஸா சாஹிப் உருவாக்கிய இலக்கியம் பரவலாகப் பாராட்டப்பட்டது. எனவே அதற்கு எந்த அறிமுகமும் தேவை இல்லை. இன்றும், இப்போதும் அது அதன் நோக்கத்தை நிறைவேற்றி விட்டதால், அதன் செல்வாக்கையும் மகத்துவத்தையும் நாம் மனதார ஒப்புக் கொள்ள வேண்டும். இஸ்லாம் முழுவதுமாக விரோதத் தாக்குதல்களால் சூழப்பட்டு, கண்ணுக்குப் புலனாகும் உலகங்களில் இஸ்லாத்தைப் பாதுகாக்கும் கடமையை உண்மையான பாதுகாவலனால் (எல்லாம் வல்ல இறைவனால்) ஒப்படைக்கப்பட்ட முஸ்லிம்கள், தமது தீமைகளுக்கு தண்டனையாகப் பரிதாபகரமான வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த காலத்தை நம் இதயங்கள் ஒருபோதும் மறக்க முடியாது. அவர்கள் இஸ்லாத்தின் பாதுகாப்பிற்காக எதுவும் செய்யவில்லை. அதற்கான திறமையும் அவர்கள் பெற்றிருக்க -வில்லை.” (தாரீக்கே அஹ்மதிய்யத், தொகுதி 2, பக்கம் 560-561)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

சுருக்கமாக, இந்த நிலம் (இந்தியத் துணைக்கண்டம்) கிறிஸ்தவ மத குருமார்களுக்கு எதிரான எமது போட்டியில் தார்-உல்-ஹர்ப் - போர்க்களம் ஆகும். எனவே, நாம் சும்மா இருந்து விடக் கூடாது. இருப்பினும், அவர்களுக்கு எதிரான நமது போர் அதே வகையில் இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். கிறித்தவ மத குருமார்கள் போர்க்களத்தில் கொண்டு வந்த அதே விதமான ஆயுதத்துடன் நாமும் முன்னோக்கிச் செல்ல வேண்டும். அந்த ஆயுதம் பேனா ஆகும். இந்தக் காரணத்திற்காகவே அல்லாஹ் இந்த அடியானுக்கு பேனாவின் அரசர் என்று பெயரிட்டான். மேலும் எனது பேனாவை அலீயின் துல்.:.பிகார் என்று பெயரிட்டான். இதன் உள்ளார்ந்த இரகசியம் என்னவென்றால், தற்போதைய சகாப்தம் சண்டை மற்றும் போருக்கான காலம் அல்ல. மாறாக இது பேனாவின் சகாப்தம் ஆகும்.

(மல்.:.பூஸாத் ஆங்கிலப் பதிப்பு, தொகுதி 1, பக்கம் 238)

ஹஸ்ரத் ஷா நி.:.மத்துல்லாஹ் வலீ (ரஹ்) அவர்களின் முன்னறிவிப்பு

15 -ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சூ.:.பி ஷா நி.:.மத்துல்லாஹ் வலீ (ரஹ்) அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் வருகையின் அறிகுறிகளை விவரித்தவாறு ஒரு பாரசீகக் கவிதையை எழுதினாரகள். ஒரு கவிதையில் அன்னார் கூறினார்கள்:

یدِ بیضا کہ با او تابندہ     باز با ذوالفقار مے بینم

‘அவருடைய கை மூஸாவின் கையைப் போல் வெண்மையாகப் பிரகாசிப்பதைக் காண்கிறேன். 'மேலும் அவரது கையில் நான் துல்.:.பிகாரைக் காண்கிறேன்.’

இந்தக் கவிதை வரிகளுக்கு கருத்து தெரிவிக்கும் போது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

“அதாவது மறுக்க முடியாத வாதங்களைப் பொருத்தவரை, அவரது சாமர்த்தியமான கை வாள் போல் பளிச்சிடுகிறது. அப்போது நான் அவரை துல்.:.பிகாருடன் பார்க்கிறேன். ஹஸ்ரத் அலீ (ரலி) துல்.:.பிகாரைக் கையில் பிடித்திருந்த காலம் உண்டு. ஆனால் மேன்மையான அல்லாஹ், அந்த இமாமுக்கு துல்.:.பிகாரை வழங்குவான். அவரது ஒளிரும் கரம் கடந்த காலத்தில் துல்.:.பிகாரால் நிறைவேற்றப்பட்டதை நிறைவேற்றும். இதனால் அவரது கை, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் துல்.:.பிகார் மீண்டும் தோன்றியது போல் இருக்கும்.

இது, கூறப்பட்ட இமாம் சுல்தானுல் கலம் ஆக இருப்பார். அவரது பேனா துல்.:.பிகாராக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இந்த முன்னறிவிப்பு, பத்து ஆண்டுகளுக்கு முன்பு பராஹீனே அஹ்மதியாவில் வெளியிடப்பட்ட, எனக்கு அளிக்கப்பட்ட ஒரு வெளிப்பாட்டின் சரியான மொழிபெயர்ப் -பாகும். அதில் கூறப்பட்டுள்ளது:




كِتَابُ الْوَلِيِّ ذُوالْفَقَارِعَلِيٍّ

கிதாபுல் வலிய்யிதுல்.ஃபிகார்-இ-அலி, அதாவது இந்த இறைநேசரின் புத்தகம் அலீயின் துல்.ஃபிகார் ஆகும்.

இங்கே குறிப்பு என்னைப் பற்றியது. இதன் காரணமாக, பல ஆன்மீக்காட்சிகளில், நான் காஸீ என்று அழைக்கப்பட்டேன். மேலும் இது பற்றிய குறிப்புகள் பராஹீனே அஹ்மதிய்யாவிலும் மற்ற இடங்களிலும் உள்ளன. (நிஷானே ஆஸ்மானி பக்கம் 28-29. ரூஹானி கஸாயின் தொகுதி 4 பக்கம் 399 பதிப்பு: யூ.கே. 2021)

மற்றொரு சந்தர்ப்பத்தில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்:

குறிப்பாக நான் என் பேனாவைக் காகிதத்தில் வைக்கும் போது இறைவனின் அற்புத சக்தியை அனுபவிக்கிறேன். நான் அரபியிலோ அல்லது உருது மொழியிலோ எதையாவது எழுதும் போதெல்லாம், யாரோ உள்ளே இருந்து எனக்கு அறிவுறுத்துவது போல் உணர்கிறேன். அரபியை எழுதும் போது, நூற்றுக்கணக்கான முழுமையான வாக்கியங்கள் என் இதயத்தில் இறங்குகின்றன. அவை வாய்மொழி வெளிப்பாடு வடிவில் அல்லது ஒரு வானவர் எனக்குக் காட்டுகின்ற காகிதத்தில் எழுத்து வடிவில் உள்ளன. இந்த வாக்கியங்களில் சில புனித குர்ஆனின் வசனங்களாகவோ அல்லது சிறிய மாற்றங்களுடன் அவற்றை ஒத்தவையாகவோ இருக்கின்றன.

பல சந்தர்ப்பங்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது நூற்களின் முக்கியத்துவம் மற்றும் தேவையைக் குறித்து கூறியுள்ளார்கள். அன்னார் கூறுகிறார்கள்:

"தற்போது பேனாவின் வாள்கள் நமக்கு எதிராக ஏவப்பட்டு குற்றச்சாட்டுகளின் அம்புகள் நம் மீது பொழிகின்றன. நமது திறமைகளை நாம் சும்மா விடாமல் பார்த்துக் கொள்வதும், இறைவனின் தூய மார்க்கத்திற்காகவும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட தூதர் (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் உண்மைத்தன்மையை நிரூபிப்பதற்காகவும் நமது பேனாவின் ஈட்டிகளைக் கூர்மைப்படுத்துவது நமது பொறுப்பாகும்."

(மல்.ஃபூஸாத் ஆங்கிலப் பதிப்பு தொகுதி 1 பக்கம் 237)

ஜமாஅத்தின் உறுப்பினர்கள் அனைவரும் எனது புத்தகங்களை ஒருமுறையாவது படிப்பது அவசியம் ஆகும், ஏனென்றால் அறிவே ஆற்றல் ஆகும். ஆற்றல் தைரியத்தை உருவாக்குகிறது. அறிவு இல்லாதவர், எதிராளியின் ஒரு கேள்வியில் வியப்படைந்து விடுகிறார்.

(மல்.ஃபூஸாத் [1988] தொகுதி 4 பக்கம் 361)

"இஸ்லாம் பேனாவால் தாக்கப்படுகிறது. எனவே, அந்தத் தாக்குதல்களுக்குப் பேனாவால் பதிலளிப்பது அவசியம் ஆகும். கா.ஃபிர்களைப் பாருங்கள். அவர்கள் இஸ்லாத்திற்கு எதிராக என்ன வகையான முயற்சிகளைச் செய்கிறார்கள்! அவர்கள் இராணுவத்தைத் தயார்படுத்தவில்லை. மாறாக அவர்கள் பல்வேறு புத்தகங்களையும் பத்திரிகைகளையும் வெளியிடுகிறார்கள். எனவே, பதிலுக்கு நமது பேனாவை எடுத்து, பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் மூலம் அவர்களின் தாக்குதல்களுக்கு எதிராக பாதுகாப்பது நமது கடமை ஆகும். (மல்.ஃபூஸாத் [1988] தொகுதி 4 பக்கம் 372-373)

நமது நண்பர்கள் ஹகீகதுல் வஹீயை ஆரம்பம் முதல் இறுதி வரை மிகுந்த கவனத்துடன் படிக்கவேண்டும் - உண்மையில் அவர்கள் அதை மனப்பாடம் செய்ய வேண்டும். அவ்வாறாயின், எந்த மவ்லவியும் அவர்கள் முன் நிற்க முடியாது. ஏனென்றால் அதில் தேவையான அனைத்து விஷயங்களும் தெளிவுபடுத்தப்பட்டு, ஆட்சேபனைகளுக்கு பதில்கள் வழங்கப்பட்டுள்ளன.

(மல்.ஃபூஸாத் [1988] தொகுதி 5 பக்கம் 235)

### எதிரிகளுக்கு விடுத்த சவால்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் சிறப்பான உதவியின் மூலமாக தம்மால் எழுதப்பட்ட நூற்களைத் தமது உண்மைக்குச் சான்றாக கூறியுள்ளார்கள். தம்மைப் பொய்ப்படுத்த முனைந்த எதிரிகளிடம் அவற்றைப் போன்ற நூல்களை எழுத முன்வருமாறு பலமுறை சவால் விடுத்துள்ளார்கள். எவருமே அதற்கு முன்வரவில்லை.

அன்னார் கூறுகிறார்கள்: "எனக்கு ஒருமுறை இந்த இல்ஹாம் இறங்கியது.

اَلرَّحْمٰنُ عَلَّمَ الْقُرْآنَ يَا اَحْمَدُ فَاضَتِ الرَّحْمَةُ عَلٰى شَفَتَيْكَ

'அளவற்ற அருளாளன் உமக்குத் திருக்குர்ஆனைக் கற்றுக் கொடுத்தான். அஹ்மதே! அருள் உமது உதடுகளில் இருந்து வழிந்தோடுகிறது.'

இதிலிருந்து ஓர் அற்புத அடையாளமாக இறைவன் எனக்கு இரண்டு விதமான அருட்களை வழங்கியிருக்கின்றான் என்பது தெளிவாகிறது. (1) எவருமே என்னுடன் போட்டியிட முடியாத அளவிற்குத் திருக்குர்ஆன் ஞானம் (2) திருக்-குர்ஆனின் மொழியாகிய அரபி மொழியின் மீது எனக்கு வழங்கப்பட்டுள்ள ஆற்றல் என்னை எதிர்க்கின்ற மார்க்க ஆலிம்கள், பண்டிதர்கள் ஒன்று சேர்ந்து வந்தாலும் எனக்கு வழங்கப்பட்டுள்ள சொல்நயம், நடையழகு, பொருட்செறிவு, கருத்தாழத்திற்கு முன்பு அவர்களால் போட்டியிட முடியாது.

இந்த வஹீயைப் பெற்ற பின்னர் நான் அரபி மொழியில் பல நூல்களை எழுதினேன். பிறகு என்னுடைய எதிரிகளை அழைத்து என்னுடன் போட்டியிட வருமாறு அழைத்து, அவர்கள் வெற்றி பெற்றால் பெரும் தொகையைக் கொண்ட பணம் பரிசாகக் கிடைக்கும் என்றெல்லாம் அறிவித்தேன். இதில் நாதிர் ஹுஸைன் டெல்லி, இஷாஅத்துஸ் ஸுன்னா

ஆசிரியர் அபூ ஸையித் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி ஆகியோர் மீண்டும் மீண்டும் அழைக்கப்பட்டனர். அவர்களுக்குத் திருக்குர்ஆன் ஞானம் இருந்தால் அரபி மொழியில் புலமை இருந்தால், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற எனது வாதத்தில் நான் பொய்யன் என்று அவர்கள் கருதினால், மனித சக்திக்கு அப்பாற்பட்ட, இறை வல்லமையின் அடையாளமாகத் திகழ்கின்ற எனது இந்த நூற்களில் காணப்படுகின்ற சான்றுகளுக்கும் ஞானங்களுக்கும் நிகரான ஒன்றை உருவாக்கிக் காட்டுங்கள் என்று அவர்களிடம் சவால் விடுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் எனது சவாலை சந்திக்க மறுத்து விட்டனர்.

திருக்குர்ஆனின் வசனங்களுக்கான விரிவுரையில் நான் எனது நூற்களில் எடுத்து வைத்திருந்த ஞானமிக்க கருத்துகளுக்கு நிகரானதை அவர்களால் காட்ட முடியவில்லை என்பது மட்டுமல்ல. வளம் நிறைந்த அரபி மொழியில் நான் எழுதிய நூற்களுக்கு எதிராக 2 வரிகள் கூட அரபி மொழியில் வடிக்க அவர்களில் எவராலும் முடியவில்லை.

எனது நூற்களான நூருல்ஹக், கராமத்துஸ் ஸாதிக்கீன், சிர்ருல் கிலா∴பா, இத்மாமுல் ஹுஜ்ஜா போன்ற அரபி நூல்களையும், அஞ்சாமே ஆத்தம், நஜ்முல் ஹுதா போன்ற நூல்களில் உள்ள அரபி பகுதிகளையும் எவராவது வாசித்தால் அவற்றின் உரைநடையிலும் கவிதையிலும் இலக்கியத்தரம் மிகுந்து காணப்படுவதை உணர்ந்து கொள்ளலாம். மேலும் என்னை எதிர்க்கின்ற உலமாக்களிடம் அவர்களுக்குத் திருக்குர்ஆன் அறிவும், அரபி மொழிப் புலமையும் இருப்பின் இதுபோன்ற ஒன்றை உருவாக்கிக் காட்டுங்கள் என்று ஆற்றல் மிகுந்த முறையில் சவால் விடப்பட்டிருப்பதையும் அந்த நூற்களிலேயே கண்டு கொள்ளலாம். அவ்வாறு முடியா விட்டால் இறைவனின் வழிகாட்டலின் மூலமே இந்தப் பணிகள் நடைபெற்றிருப்பதையும் இந்த நூற்கள் எனது உண்மைக்கான ஒரு சான்று என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அந்த நூற்களில் குறிப்பிட்டுள்ளேன். அந்தோ பரிதாபம்! அவர்கள் இந்த சவலை ஏற்கவும் முடியவில்லை. என்னை எதிர்ப்பதை விட்டு விடவும் இல்லை. எப்படி இருப்பினும் வல்லமைமிக்க தூதுச் செய்தி அவர்களுக்கு எத்தி வைக்கப்பட்டது. அவர்கள் இறைவனால் நியமிக்கப்பட்ட ஒருவரை மறுத்து கட்டுப்படதாவர்கள் என்ற குற்றத்திற்கு நிரூபிக்கப்பட்டு விட்டார்கள்.” (தரியாகுல் குலூப், ரூஹானி கஸாயின், தொகுதி 15, பக்கம் 230-231)

ஜமாஅத்தின் உறுப்பினர்கள் அனைவரும் எனது புத்தகங்களை ஒருமுறையாவது படிப்பது அவசியமாகும். ஏனென்றால் அறிவே ஆற்றல் ஆகும். ஆற்றல், தைரியத்தை உருவாக்குகிறது. அறிவு இல்லாதவர், எதிராளியின் ஒரு கேள்வியில் வியப்படைந்து விடுகிறார்.
(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 361)

# இதோ ருஷ்தம் வந்து விட்டார்!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சம்பவத்தை கூறுவதுண்டு. புகழ்பெற்ற வீரனாகிய ருஷ்தமின் வீட்டிற்கு ஒருநாள் ஒரு திருடன் வந்து விட்டான். ருஷ்தம் போர் கலைகளில் வல்லவர். நன்கு அறியப்பட்ட மிகச் சிறந்த வீரர். சிறப்பாக வாள் வீசுபவர். ஆனால் அவருக்கு மல்யுத்தம் வராது. வீட்டில் திருடனைக் கண்டதும் ருஷ்தம் அவனை பிடிக்க முயன்றார். ஆனால் திருடன் மல்யுத்தக் கலையில் தேர்ச்சி பெற்றிருந்தான். அவன் ருஷ்தமைக் கீழே தள்ளி அவர் மீது ஆதிக்கம் செலுத்தி விட்டான். தான் கொல்லப்பட்டு விடுவோம் என்று எண்ணிய ருஷ்தம் அந்த நேரத்தில் சப்தமிட்டு ‘இதோ ருஷ்தம் வந்து விட்டார்!’ என்று கூவினார். திருடன் இதைக் கேட்டதும் அவரை விட்டு விட்டு ஓடி விட்டான்.



திருடன் ருஷ்தமுடன்தான் சண்டையிட்டுக் கொண்டிருந்தான். மேலும் உண்மையில் அவர் மீது வெற்றி பெற்று அவரைக் கீழே விழும்படியும் செய்து விட்டான். எனினும் அவரது பெயரைக் கேட்டதும் பயந்து ஓடி விட்டான். மக்கள் சில நேரங்களில் கட்டுக் -கதைகளைப் பரப்பி அதன் மூலம் மக்களின் மனஉறுதியைக் குலைத்து விடுவர் என்ற கருத்தை ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் இந்த சம்பவத்தின் மூலமாக விளக்கினார்கள். இதனைக் கூறிவிட்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: தனது வீட்டில் நெருப்பு பற்றி எரிவதைப் பார்க்கும் மனிதனுக்கு ஏற்படும் பாதிப்பை விட அவன் வீட்டில் இல்லாத போது அவனது வீட்டில் நெருப்பு பற்றி விட்டதாகக் கேள்விப்படும் போது அவனுக்கு ஏற்படும் பாதிப்பு அதிகமாக இருக்கும். மேலும் கூறினார்கள்: குண்டுகள் பொழியப்படுவதாக பரவலாகப் பரப்பப்படும் வதந்திகளை ஒப்பிடும் போது ஓரிடத்தில் போரில் உண்மையில் குண்டுகள் போடப்படுவது அந்த அளவிற்கு அபாயமானதல்ல.

எனவே, பொய்யான வதந்திகள் பரப்பப்படும்போது அவை சில சமயங்களில் கோழைத்தனத்தை உருவாக்கி மக்களின் உறுதியைக் குலைத்து விடுகின்றன. எனவே, தைரியத்திலும் மனஉறுதியிலும் நிலைத்து நிற்பதற்கு வதந்திகள் பரப்பபடுவதை நிறுத்துவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

(ஜுமுஆ குத்பா 06.02.2015)

# அஹ்மதிய்யத் உண்மை இஸ்லாம்

மவ்லவி S. அப்துல் காதிர்

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு எதிராக ஆலிம்கள் மேற்கொள்கின்ற வெறுப்புப் பிரச்சாரம் இன்று – நேற்று அல்ல கடந்த நூறு ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகிறது. இன்னும் சொல்வதென்றால், மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு மட்டும் பிரத்யேகமாக இந்த எதிர்ப்பு கிளம்பி இருக்கிறதா என்றால், அதுவுமல்ல. உலகம் தோன்றிய காலத்திலிருந்தே எப்போதெல்லாம் உண்மையான நபிமார்கள் மனித குலத்தைச் சீர்திருத்த தோன்றினார்களோ அப்போதெல்லாம் அவர்களை எதிர்த்து இவ்வகையான அல்லது இதிலும் மேலான வெறுப்புணர்வு மக்களிடையே திட்டமிட்டு பரப்பப்பட்டு வந்துள்ளது. அதன் விளைவாக அந்த நபிமார்களும் அவர்களின் ஜமாஅத்தும் துன்புறுத்தப் –பட்டுள்ளனர். இதை நபிமார்களின் வரலாறு நெடுகிலும் நம்மால் காண முடிகிறது. இதற்கு மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் விதிவிலக்கு அல்ல.



ஆனால், இந்த வரலாறுகளில் ஓர் ஒற்றுமை இருப்பதை நாம் கவனிக்க வேண்டும். அதாவது, இந்த எதிர்ப்புகளின் விளைவாக நபிமார்களும் அவர்களை ஏற்றுக் கொண்ட ஆதரவாளர்களான நம்பிக்கை கொண்டவர்களும்தான் இறுதியில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவர்களை எதிர்த்த அத்தனை எதிரிகளும் இழிவடைந்து தோல்வியுற்று அழிந்து போயிருக்கிறார்கள். இதைத்தான் அல்லாஹ் தன் திருமறையில் இவ்வாறு கூறுகிறான்:

'நிச்சயமாக நானும் எனது தூதர்களும் வெற்றி பெற்றே தீருவோம்' என அல்லாஹ் விதித்துள்ளான். நிச்சயமாக அல்லாஹ் ஆற்றல் மிக்கவனும், வெற்றிக்குரியவனுமாவான். (58:22)

திருமறையின் இந்த சாட்சியின் அடிப்படையில் ஹஸ்ரத் காத்தமுன் நபிய்யீன் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மை நேசர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க தோற்றுவித்த அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் கடந்த நூறு வருடங்களுக்கும் மேலாக நிலைத்திருப்பது மட்டுமின்றி நாள்தோறும் வளர்ந்து வருவது இதன் உண்மைக்கு ஓர் அசைக்க முடியாத சான்றாகும்.

மேலும், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் என்பது இந்த ஆலிம்கள் கூறுவது போன்று ஏதோ ஆங்கிலேயருக்கு ஆதரவாக செயல்படும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட ஓர் இயக்கம் அல்ல. மாறாக இது அல்லாஹ்வின் தூதர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் முன்னறிவித்த அதே இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க உருவாக்கப்பட்ட ஓர் உண்மையான இஸ்லாமிய ஆன்மீக இயக்கமாகும்.


இந்த இயக்கத்தின் கொள்கைகள் மற்றும் கோட்பாடு –களைக் குறித்து இவ்வியக்கத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நமது மார்க்கத்தின் சாராம்சமும் அடிப்படையும் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மது ரஸூலுல்லாஹ் என்பதாகும். இந்த உலக வாழ்வில் நாம் கொண்டிருக்கின்ற கொள்கை; இத்துடன் நாம் இறைவனின் அருளாலும் அவன் தரும் பாக்கியத்தாலும் இந்த தற்காலிக உலகை விட்டு செல்லவிருக்கிறோம்; அது ஹஸ்ரத் சய்யிதுனா வ மவ்லானா முஹம்மது முஸ்தஃபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் காத்தமுன் நபிய்யீன், எல்லா நபிமார்களை விடவும் சிறந்தவர் ஆவார்கள் என்பதாகும். அவர்களின் கையினால் மார்க்கம் முழுமையடைந்து விட்டது. இந்த அருட்கொடை முழுமை எய்து விட்டது. இதன் மூலம் மனிதன் நேர்வழி நடந்து இறைவனை அடையலாம். மேலும், நாம் மிகவும் உறுதியுடன் திருக்குர்ஆன் இறைவேதங்களில் இறுதியானதும் அதில் ஒரு புள்ளியோ அல்லது சுழியோ அதன் கட்டளையோ அதிகமாகவும் முடியாது; குறைக்கவும் முடியாது என்று நம்பிக்கை கொள்கிறோம். திருக்குர்ஆனின் கட்டளையைத் திருத்தவோ, மாற்றவோ, நீக்கவோ கூடிய வஹீ அல்லது இல்ஹாம் இறைவனிடமிருந்து வர முடியாது. இதை மாற்ற முடியும் என்று யாராவது கருதினால் அவர் நமது பார்வையில் நம்பிக்கை கொண்டவர்களின் கூட்டத்தில் இருந்து விலகியவர், இட்டுக்கட்டுபவர் மற்றும் காஃபிர் ஆவார்.

(இஸாலாயே அவ்ஹாம், ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 169,170)

ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் முன்னறிவித்தபடி 13 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 14 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், இமாம் மஹ்தியாகவும் அல்லாஹ் தன்னை அனுப்பியிருக்கிறான் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாதம் புரிந்தார்கள். 'இஸ்லாத்தை மீண்டும் உலகில் வெற்றி பெறச் செய்வதே என் வருகையின் நோக்கம்' என்றார்கள்.

இஸ்லாம் அல்லாஹ்வின் இறுதி மார்க்கம் என்றும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபிமார்களின் முத்திரை என்றும், திருக்குர்ஆன் அல்லாஹ்வின் கடைசி வேதம் என்றும், அதில் எவ்வித மாற்றத்துக்கும் அறவே இடமில்லை என்றும் அவர்கள் தெளிவாக வாதிட்டார்கள். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தியின் நோக்கம்; முஸ்லிம்களை இஸ்லாத்தில் ஒன்றிணைப்பதும் ஈமானுக்கு உயிரூட்டுவதும் ஆகும். "நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது கொண்ட அளவுகடந்த அன்பால், அவர்களை முழுமையாகப் பின்பற்றியதால் அல்லாஹ் எனக்கு இந்த அந்தஸ்தை அளித்துள்ளான்" என்றார்கள்.




அல்லாஹ்வுக்கும் இத்தூதர் (அதாவது முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கும்) கட்டுப்பட்டு நடப்பவர்கள் அல்லாஹ் அருள்புரிந்தவர்களான, நபிமார்கள், சித்தீக்குகள் (உண்மையாளர்கள்), ஷஹீதுகள் (உயிர்த்தியாகிகள்), ஸாலிஹீன்கள் (நல்லவர்கள்) ஆகியோரைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். இத்தகையோர் மிக்க நல்ல நண்பர்களாவர். (4:70)

மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் திருக்குர்ஆன், நம்பத்தகுந்த நபிமொழி மற்றும் உம்மத்தின் சான்றோர்களின் எழுத்துக்களில் இருந்து, பனீ இஸ்ராயீல் மக்களுக்காக அனுப்பப்பட்ட மஸீஹ் ஈஸா (அலை) வானத்திற்கு உயிருடன் செல்லவில்லை. அவர்கள் மற்றெல்லா நபிமார்களைப் போலவே இயற்கையாக மரணித்து விட்டார்கள் என்றும் அவர்களின் மண்ணறை காஷ்மீரில் உள்ளது என்றும் எடுத்துக் கூறி அதனை தக்க சான்றுகளுடன் நிரூபித்தார்கள்.

உண்மை நிலை இவ்வாறிருக்க, 'முஸ்லிம்களின் ஒற்றுமையை சீர்குலைக்க ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட இயக்கம் இந்த அஹ்மதிய்யா இயக்கம்' என்று பிரச்சாரம் செய்வது உண்மைக்கு மாற்றமானதும், முற்றிலும் அநீதியும் ஆகும். மேலும், ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் கொள்கைக்கும் கூற்றுக்கும் முற்றிலும் புறம்பான, அடிப்படை இல்லாத, பொருத்தமற்ற ஆட்சேபணையாகும்.

கண்மூடித்தனமாக ஆலிம்களின் கூற்றுக்களையும் மல்லவிமார்களின் பொய் பிரச்சாரங்களையும் முஸ்லிம் பொதுமக்கள் நம்பி, பின்பற்றி வந்த காலம் இப்போது மலையேறி விட்டது என்ற எதார்த்த நிலையை ஆலிம்கள் உணர்ந்து செயல்படுவது நல்லது.

38727 : تکون فی أمتی قزعة فیصیرالناس الیٰ علمائهم فاذا هم قردة و خنازیرُ (الحکیم ـ عن ابی امامة)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எனது உம்மத்தில் கருத்து வேறுபாடுகள் வரும்போது மக்கள் தமது ஆலிம்களிடம் தீர்வை நாடிச் செல்வார்கள். அங்கு அவர்களை மக்கள் குரங்குகளாகவும், பன்றிகளாகவும் காண்பார்கள்." (நூல் கன்ஸுல் உம்மால் ஹதீஸ் எண்:38727)

### உண்மையை சற்று அலசி ஆராய்வோம்:

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனர் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களையும் அவர்களின் ஜமாஅத்தையும் குறி வைத்து உண்மைக்கு மாற்றமான ஆட்சேபணைகள் செய்யப்படுகின்றன. அவற்றில் ஒன்றை நாம் கீழே தருகிறோம். அத்துடன் இந்த ஆட்சேபணைக்குரிய பதிலையும் உண்மை நிலையையும் விளக்கமாக தருகிறோம்.

### ஆட்சேபணை:

"ஆங்கிலேயர்களின் காலனிய ஆட்சிக்காலத்தில் தங்களை எதிர்க்கும் இந்திய முஸ்லிம்களிடம் குழப்பங்களை ஏற்படுத்தி அவர்களின் மார்க்கத்தை விட்டும் குறிப்பாக முஸ்லிம்களின் வீரதீரமிக்க ஜிஹாது சிந்தனைகளிலிருந்தும் அவர்களை அகற்றி அதனால் தாங்கள் முஸ்லிம்களின் எதிர்ப்புகளிலிருந்து சுலபமாக தப்பித்துக் கொள்ளலாம் என்ற ஆங்கிலேய ஆதிக்கவாதிகளின் சதி வேலையின் மூலம், ஒருங்கிணைந்த இந்தியாவில் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள காதியான் என்ற ஊரில் வசிந்து வந்த, ஆங்கிலேயர்களின் கைப்பாவையாக விளங்கிய மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (1839–1908 CE) என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட (1876 CE) வழிகெட்டக் கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள்தான் காதியானிகள்."

### நமது பதில்:

இந்த நீளமான வாக்கியத்தின் ஒற்றை வரி சாராம்சம்: முஸ்லிம்களின் ஒற்றுமையை சீர்குலைப்பதற்காக ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்டவர்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த காலத்தில் ஏதோ முஸ்லிம்கள் எல்லாரும் ஒற்றுமையாக இருந்ததாகவும், மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் மூலம்

முஸ்லிம்களின் ஒற்றுமை சீர்குலைந்ததாகவும் ஒரு கற்பனையை ஆலிம்கள் உருவாக்க நினைப்பது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது! இந்த முஸ்லிம் சமுதாயம் ஆலிம்களின் கைகளில் சிக்கி வழிதவறியதே இதன் பிரிவினைக்கு சந்தேகமில்லாத சான்று. பெயர் தாங்கி ஆலிம்கள் தங்கள் சுயநலனுக்காக பிரிவினை வாதத்தால் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்படுத்திய இழப்புகளை விட வேறு யாரும் பெருமளவு இழப்புகள் ஏற்படுத்தியதில்லை என்று சொன்னால் அது மிகையில்லை.

எனவே, ஆலிம்களின் கூற்றை ஒரு பக்கம் வைப்போம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன்றைய கால முஸ்லிம்களின் நிலையைக் குறித்து என்ன கூறினார்கள் என்பதை முதலில் பார்க்கலாம்.

“ஒரு ஜோடி காலனிகளுள் ஒன்றோடொன்று ஒத்திருப்பது போன்று இஸ்ரவேல் சமுதாயத்திற்கு நிகழ்ந்தது அனைத்தும் எனது சமுதாயத்திற்கும் நிகழும். இஸ்ரவேலர்கள் 72 பிரிவுகளாகப் பிரிந்தனர். எனது சமுதாயமோ 73 பிரிவுகளாய்ப் பிரியும். (அவற்றுள்) ஒரு பிரிவைத் தவிர ஏனைய பிரிவினர் அனைவரும் நரகத்தை அடைவர். ‘இறைத் தூதரே! அந்தப் பிரிவு எது?’ என்று வினவப்பட்டபோது, ‘நானும் எனது சஹாபிகளும் எவ்வாறு இருக்கின்றோமோ அவ்வாறு இருப்பவர்கள்’ என நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.”

(ஆதாரம்: மிஷ்காத்துல் மஸாபீஹ் பாகம் 1 பக்கம் 61)

இப்னு மாஜா –வில் இந்த ஹதீஸின் இறுதிப் பகுதி இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது: “72 கூட்டங்கள் நரகிலும், ஒரு பிரிவு சுவர்க்கத்திலும் நுழைவர். இந்தப் பிரிவு ஒரு ஜமாஅத்தாக (அதாவது ஒரு கூட்டமைப்பாக) இருக்கும்.”

(ஆதாரம்: இப்னு மாஜா பாகம் 5 பக்கம் 128,129)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு உண்மையாகும் விதமாக இந்தியாவில் ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் உலகம் முழுவதும் முஸ்லிம்கள் பல பிரிவுகளாப் பிளவுபட்டிருந்தனர் என்பதற்கு சான்றுகள் தேவையில்லை. இது அனைவரும் அறிந்ததே.

ஆனால், திருக்குர்ஆன், நம்பத்தகுந்த நபிமொழிகள், சான்றோர்களின் கூற்றுக்கள் போன்ற இஸ்லாத்தின் அடிப்படைகளைப் புரிந்துணராமல் உண்மையுடன் பொய்யைக் கலந்து விடுவதில் சமரசம் செய்து கொள்ளும் போக்கு முஸ்லிம்களிடம் பொதுவாக இருப்பதால், அஹ்மதிய்யா ஜமாஅத்தைக் குறித்து உண்மைக்கு மாற்றமான கருத்துகளை ஆலிம்கள் பரப்பும்போது அதனை அப்படியே நம்பி ஏமாந்து போவது சாத்தியமாகிறது. இதையே இஸ்லாத்தின் பெயரால் பெயரளவில் ஆலிம்களாக இருப்பவர்கள் செய்து வருகின்றனர். எப்போதெல்லாம் முஸ்லிம் பொதுமக்கள் நம்மவர்களாலும் அந்நியர்களாலும் ஏமாற்றப்படுகின்றார்களோ அப்போதெல்லாம் அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத் திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாத்தின் உண்மையை இறையச்சத்துடன், நேர்மையுடன், அனுதாப உணர்வுடன் எடுத்துச் சொல்லி இந்த சமுதாயத்தை நல்வழிப்படுத்த பாடுபட்டு வருகிறது.

திருக்குர்ஆனில் இறைவன் கூறுகின்றான்: “அவர் எந்தச் சொல்லையேனும் பொய்யான வெளிப்பாடாக எம்மீது சுமத்தி இருந்தால் நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்–போம். பின்னர் நிச்சயமாக நாம் அவருடைய கழுத்துப் பெரு நரம்பைத் துண்டித்து விடுவோம். உங்களில் எவராலும் அவரை (எமது தண்டனையிலிருந்து) காப்பாற்ற இயலாது.” **(69:45–48)**



“அல்லாஹ்வுக்கு எதிரில் பொய்யைப் புனைந்து கூறுபவர்கள் ஒருபோதும் வெற்றி பெறுவதில்லை.” **(16:117)**

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் ஆங்கிலேயர்கள் தூண்டிவிட்டதன் காரணமாக நபியென்று வாதித்திருந்தால், தமக்கு இறைவனிடமிருந்து இல்ஹாம் வருகின்றது என்று இட்டுக்கட்டியிருந்தால் மேற்கண்ட இறைவசனங்களின்படி அவரும் அவருடைய ஜமாஅத்தும் எப்போதோ அழிந்து போயிருக்க வேண்டும். ஆனால் இந்த ஜமாஅத் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக கடந்த 120 வருடங்களாக வளர்ந்து பல்கிப் பெருகி வருகிறது.

ஒருவர் பொய்யாக தன்னை நபி என வாதித்து இறைவன் மீது இட்டுக்கட்டினால் அவரும் அவரது இயக்கமும் அல்லாஹ்வின் தண்டனைக்கு இலக்காகி அழிந்துவிடும் என்பது உண்மை! அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து ஆங்கிலேயர்கள் மட்டுமல்ல உலகமே ஒன்று சேர்ந்து திரண்டு வந்தாலும் யாராலும் அவரைக் காப்பாற்ற முடியாது என்பது உண்மை! மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் தம்மை நபி என்று வாதித்தது உண்மை! அல்லாஹ்வின் அருளால் இந்த ஜமாஅத் தினந்தோறும் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பது உண்மை! எனவே இந்த

உண்மைகளை அல்லாஹ்வுக்காக அப்படியே ஏற்றுக் கொள்வது தான் நீதி, அறம்!

**ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் உண்மைகளில் இன்னும் சிலவற்றை நாம் தெரிந்து கொள்வோம்.**

ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்தில் தம் பத்திரிகை ஒன்றில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் எழுதுகிறார்கள்: ''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நாங்கள் காத்தமுன் நபிய்யீன் என்று நம்புவதில்லை என என் மீதும் என் ஜமாஅத்தின் மீதும் குற்றம் சாட்டப்படுகிறது. இது எங்களைப் பற்றிய பெரும் அவதூறாகும். எத்தகு உறுதியான நம்பிக்கையுடனும், ஆன்மீக ஞானத்துடனும், உளப்பூர்வமாகவும் நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுல் அன்பியா என்று உண்மைப்படுத்து –கிறோமோ அதில் இலட்சத்தில் ஒரு பகுதி கூட இந்த ஆட்சேபணையை எழுப்புவர்கள் நம்புவதில்லை.''

(அல்ஹகம் பத்திரிகை 17 மார்ச் 1905)

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மறுப்பவன் அல்லன். லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பதே எனது கொள்கையாகும். நபிகள் நாயகம்




(ஸல்) அவர்களைப் பற்றி வலாகிர் ரஸூலல்லாஹி வகாத்தமன் நபிய்யீன் என்பதின் மீது நான் ஈமான் கொண்டுள்ளேன் என்று நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். எனது கருத்து உண்மைதான் என்பதற்கு இறைவனுக்கு எத்தனை பெயர்கள் உள்ளனவோ அத்தனை முறை சத்தியம் செய்கிறேன். திருக்குர்ஆனில் எத்தனை எழுத்துக்கள் உள்ளனவோ அத்தனை முறை சத்தியம் செய்கிறேன். இறைவனிடத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எத்தனை தகுதிகளைப் பெற்றுள்ளார்களோ அத்தனை முறை சத்தியம் செய்கிறேன்.''

''அல்லாஹ்வின் கூற்றுக்கும் இறைதூதரின் கூற்றுக்கும் மாற்றமாக எக்கொள்கையும் என்னுடைய கொள்கையல்ல. அவ்வாறு மாற்றமான ஒரு கொள்கையை நான் கொண்டுள்ளதாக யாரும் நினைத்தால் அது அவருடைய தவறாகும். நான் இந்தளவுக்கு எனது கொள்கையைப் பற்றி கூறிய பிறகும் என்னை காஃபிர் என்று யாரும் கருதினாலோ, காஃபிர் என்று தீர்ப்பளித்தாலோ அவர் மரணமடைந்த பிறகு அதற்காக இறைவனிடத்தில் பதில் சொல்லியாக வேண்டும் என்பதை அவர் நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்ளட்டும்.''

(ஆதாரம்: கராமாத்துஸ் ஸாதிகீன் பக்கம் 25)

இந்த மேற்கொள்கள் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் எழுதிய நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவை. இந்நூல்களை அவர்கள் ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த காலகட்டத்தில் எழுதினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது நடுநிலையோடு அல்லாஹ்வுக்கு அஞ்சி சிந்தியுங்கள். ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் கொள்கைகள் உண்மை இஸ்லாமிய கொள்கையா? அல்லது ஆங்கிலேயர்களின் கொள்கையா? ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் நூல்களை வாசிக்காமல், அவர்களை எதிர்த்து வந்தவர்கள் எழுதி வைத்த பொய்களை மட்டும் வாசித்து அவற்றைக் குறித்து சரியாக ஆய்வு கூட செய்யாததே இத்தகு ஆட்சேபணைகளை எழுப்புவதற்குக் காரணமாகும்.

ஆங்கிலேயர்கள் குறித்த தன் கொள்கை நிலைபாட்டை ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் வெளிப்படுத்திய காரணமும் அதன் நோக்கமும்:

***இந்தத் தலைப்பை நாம் இரண்டு கண்ணோட்டங்களில் அணுக வேண்டும்.*** ஒன்று, ஆங்கிலேயர்களின் மத அடிப்படையிலான கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு இருந்த கருத்து. இரண்டாவது, ஆங்கிலேய அரசு இந்தியாவில் நடத்தி வந்த ஆட்சிமுறை குறித்து ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் நிலைபாடு.

**மத அடிப்படையிலான கண்ணோட்டோம்:**

ஆங்கிலேயர்கள் மத நம்பிக்கையின் அடிப்படையில் கிறிஸ்தவர்கள் என்பதை யாவரும் அறிவர்.

هُوَالَّذِیۡ اَرۡسَلَ رَسُوۡلَہٗ بِالۡہُدٰی وَ دِیۡنِ الۡحَقِّ لِیُظۡہِرَہٗ عَلَی الدِّیۡنِ کُلِّہٖ وَلَوۡ کَرِہَ الۡمُشۡرِکُوۡنَ

அவனே தன்னுடைய தூதரை நேர்வழியுடனும், உண்மையான மார்க்கத்துடனும் (ஏனைய) எல்லா சமயங்களின் மீதும் வெற்றி பெறச் செய்வதற்காக அனுப்பினான். இதை இணை வைப்பவர்கள் எவ்வளவு வெறுத்தாலும் சரியே! (9:33, 61:10) என்ற இந்த திருமறை வசனத்திற்கேற்ப கிறிஸ்தவ மதத்தின் மீது இஸ்லாத்தின் வெற்றியை நிரூபிக்க வேண்டிய காலம் இந்தக் காலமாகும்.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள், ''இந்த புனித நோக்கத்திற்காக இறைவன் தன் வாக்குறுதிக்கேற்ப என்னை இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆக அனுப்பியுள்ளான்'' என்று வாதம் செய்தார்கள்.

இந்த வகையில் கிறிஸ்தவ மதம் குறித்த ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் கொள்கைகளும் நிலைபாடும் அவர்களின் எழுத்துகளிலிருந்தே நமக்குக் கிடைக்கின்றன.

ஆங்கிலேயர்கள் கடவுளாக வணங்கி வருகிற ஈஸா (அலை) அவர்கள் இஸ்ரவேலர்களுக்காக அனுப்பப்பட்ட ஒரு தூதர் மட்டுமே என்றும், அவர் சிலுவையில் அடிக்கப்பட்டார். ஆனால் அதில் அவர் மரணிக்கவில்லை. மாறாக காப்பாற்றப்பட்டார் என்றும் அதன் பிறகு அவர் காணாமற்போன இஸ்ரவேல் கோத்திரத்தின் மற்ற மக்களைத் தேடி காஷ்மீர் வந்தார் என்றும் அங்கேயே தமது 120 –வது வயதில் இயற்கையாக மரணமடைந்தார் என்றும் திருக்குர்ஆன், பைபிள், வரலாற்று ஆவணங்கள் மற்றும் மருத்துவ சான்றுகளோடு நிரூபித்தார்கள்.

(ஆதாரம்: மஸீஹ் இந்துஸ்தான் மே, தமிழில் இந்நூலின் பெயர் 'இந்தியாவில் இயேசு'. அதன் ஆங்கில மொழியாக்கம்: https://www.alislam.org/book/jesus-in-india/)

"நான் ஆன்மீக அடிப்படையில் சிலுவையை உடைப்பதற் –காகவும் கருத்து வேறுபாடுகளைக் களைவதற்காகவும் அனுப்பப்பட்டுள்ளேன்."

(சஷ்மயே மஸீஹி எனும் நூல். இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு: www.alislam.org>library>books>Foundation-of-Christianity)

"கிறிஸ்தவர்களால் உருவாக்கப்பட்ட கடவுள் ஸ்ரீநகர் காஷ்மீரில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார். அவரால் இனி யாருக்கும் உதவ முடியாது."

(சஷ்மயே மஸீஹி. இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு)

கிறிஸ்தவ மதவாத சக்திகளை ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் 'தஜ்ஜால்' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.



காஷ்மீர் ஸ்ரீநகரிலுள்ள ஈஸா (அலை) அவர்களின் மண்ணறை

இவை காழ்ப்புணர்ச்சிக்கு வசப்பட்டு சொன்ன வார்த்தைகள் அல்ல. திருக்குர்ஆன், நம்பத்தகுந்த நபிமொழி மற்றும் முந்தைய வேதங்களின் ஆதாரங்களின் அடிப்படையில் மட்டுமல்லாது இந்தக் காலத்தில் இறைவன் அவர்களுக்கு வழங்கிய இல்ஹாமின் ஒளியிலும் இதனை கூறினார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்...)



*மார்க்கத்திற்காக தொண்டாற்றும் வாய்ப்பு கிடைக்கப்பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த வாழ்வை அர்ப்பணித்தவர்கள்*

# காதியானும் அதன் புனித, வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும் 1

**தொகுப்பு: மவ்லானா முஹம்மது ஹமீது கவ்ஸர்**
(அஹ்மதிய்யத் வரலாற்றுத் துறையின் பொறுப்பாளர், காதியான்)

**தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.**

### காதியானின் வரலாறு மற்றும் அது அமைந்திருக்கும் இடம்:

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் சய்யிதுனா மிர்ஸா குலாம் அஹ்மது அலைஹிஸ் ஸலாம் அவர்களின் முன்னோர்களில் பாரசீகவமிசத்தை (அதாவது ஈரானிய குடும்பத்தை)ச் சேர்ந்தவராக இருந்த ஹஸ்ரத் மிர்ஸா ஹாதீபேக் சாஹிப் 'சமர்கந்து' (இது உஸ்பெகிஸ்தானிலுள்ள ஒரு நகரம் ஆகும் - மொழிபெயர்ப்பாளர்) என்ற பிரதேசத்தில் இருந்து ஹிஜ்ரத் செய்து பல்வேறு இடங்களில் பயணித்தவாறு தனது 200 நண்பர்களுடன் கி.பி. 1530 -ஆம் ஆண்டில் இப்போது காதியான் இருக்கின்ற இந்த இடத்தில் குடிபெயர்ந்-தார்கள். அந்தக் காலத்தில் இந்த இடம் காடாகவும், வனப் பகுதியாகவும் இருந்தது. வெகு தொலைவு வரை எந்த மக்களின் குடியிருப்பும் இருக்கவில்லை. அவர்கள் தாம் குடிபெயர்ந்த கிராமத்திற்கு 'இஸ்லாம்பூர்' என்று பெயர் வைத்தனர். அது பல மாற்றங்களில் உருமாறியவாறும், பல்வேறு படித்தரங்களைக் கடந்தவாறும் 'இஸ்லாம்பூர்காஸீ' என்றும், பின்னர் 'காதியான்' என்றும் ஆகிவிட்டது. காதியான் லாஹூரிலிருந்து 70 மைல் தொலைவிலும், அமிர்தசரஸில் இருந்து 36 மைல் தொலைவிலும் அமைந்திருக்கிறது. அவ்வாறே பட்டாலாவிலிருந்து இது 11 மைல் தொலைவிலும், குர்தாஸ்பூரிலிருந்து 18 மைல் தொலைவிலும் இருக்கிறது.

இந்த காதியானிலேயே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் 1835 -ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 -ஆம் தேதி அன்று பிறந்தார்கள். மேலும் அவர்கள் 26, மே 1908 -ஆம் ஆண்டு லாஹூரில் மரணமடைந்தார்கள். அங்கிருந்து அவர்களின் பரிசுத்தமான உடல் காதியான் கொண்டு வரப்பட்டது. மேலும் 1908 -ஆம் ஆண்டு மே மாதம் 27 -ஆம் தேதி காதியானிலுள்ள 'பெஹஷ்தி மக்பராவில்' அவர்களின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. காதியான் சய்யிதுனா இமாம் மஹ்தி (அலை) அவர்களின் பிறந்த இடமும், அடக்கம் செய்யப்பட்ட இடமுமாக இருப்பதன் காரணமாக அது முழு உலகிலும் பிரபலமாகி விட்டது. மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் துவக்க மற்றும் நிரந்தர மேலிடமாகவும் ஆகி விட்டது.

1947 -ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னர் காதியானைச் சுற்றியிருந்த பட்டாலா, அமிர்தசரஸ், குர்தாஸ்பூர், பட்டான்கோட் ஆகிய ஊர்களில் வாழ்ந்த எதிரிகள் காதியானை நாங்கள் அழித்து நாசமாக்கி விடுவோம் என்று மிரட்டிக் கொண்டிருந்தனர். மினாரத்துல் மஸீஹை உடைத்து வீழ்த்தி விடுவது பற்றியும், பெஹஷ்தி மக்பராவிலுள்ள மண்ணறைகளைத் தோண்டி எடுத்து விடுவது பற்றியும் சூளுரைத்துக் கொண்டிருந்தனர். ஆனால் இறை நியதி (சூளுரைத்த) அவர்களுடைய பெரியோர்களின் மண்ணறைகளின் அடையாளம் கூட காணமுடியாத அளவுக்கு அழித்து விட்டது. (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் எதிரிகளாக இருந்த பட்டாலாவைச் சேர்ந்த முஹம்மது ஹுசைன் என்பவரின் மண்ணறையும், அமிர்தசரஸைச் சேர்ந்த சனாவுல்லாஹ் என்பவரின் பிறந்த இடமும், வாழ்ந்த இடமும் எங்கே சென்றது? அந்த நகரங்களில் அவர்களின் பெயரும் எஞ்சியிருக்கவில்லை. ஆனால் அதற்கு நேர்மாறாக, எவரை பொய்யர் என்று

மினாரத்துல் மஸீஹிலிருந்து எடுக்கப்பட்ட காதியானின் பழைய தோற்றம்




கூறப்பட்டதோ, அவருடைய மண்ணறையில் நாள்தோறும் துஆ செய்பவர்களின் வரிசை நின்று கொண்டிருக்கிறது. மினாரத்துல் மஸீஹிலிருந்து ஐவேளை பாங்கு உயர ஒலித்துக் கொண்டிருக்கிறது. அது ஒருபோதும் நின்றுவிடவும் இல்லை. மேலும் ஒருபோதும் நின்றும் விடாது - இன்ஷா அல்லாஹ். இது ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் எண்ணற்ற உண்மைக்கான சான்றுகளில் ஒரு மகத்தான சான்றில்லாமல் வேறென்ன?

முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்களின் ஹதீஸின் ஒளியில் காதியானின் முக்கியத்துவம்:

நமது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் முஸ்லிம்களை நோக்கி இவ்வாறு கூறினார்கள்:

لا تُشَدُّ الرِّحَالُ اِلَّا اِلٰى ثَلاثَةِ مَسَاجِد، مَسْجِدِیْ هٰذَا وَ مَسْجِدُ الْحَرَامِ وَ مَسْجِدُ الْاَ قْصٰى

(லாதுஷெத்துர் ரிஹாலு இல்லா இலா ஸலாஸதி மஸாஜித. மஸ்ஜிதீ ஹாஸா, வ மஸ்ஜிதுல் ஹராமி, வ மஸ்ஜிதுல் அக்ஸா).

பொருள்: நபி கரீம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

“எனது இந்த மஸ்ஜிது, (அதாவது மதீனா முனவ்வராவாகிய மஸ்ஜிது நபவி), (கஅபதுல்லாஹ் ஆகிய) மஸ்ஜிது ஹராம், மற்றும் மஸ்ஜிது அக்ஸா ஆகிய மூன்று பள்ளிவாயில்களுக்காக அன்றி, வேறு எங்கும் ஒட்டகப் பல்லக்கை ஆயத்தம் செய்ய வேண்டாம்.” (சஹீஹ் முஸ்லிம். கிதாபுல் ஹஜ். பாபு .்.பஸ்லிம் மஸாஜிதிஸ் ஸலாஸதி)

(அதாவது பயணம் மேற்கொண்டு செல்ல அவசியமாக இருக்கும் மஸ்ஜிது என்பது மஸ்ஜிது நபவீ, கஅபத்துல்லாஹ், மஸ்ஜிது அக்ஸா ஆகிய மஸ்ஜிதுகள்தான். பயணம் மேற்கொண்டு சென்று செல்லும் அளவுக்கு வேறு எந்த மஸ்ஜிதும் இல்லை என்று நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள் - மொழிபெயர்ப்பாளர்.)

இதே மஸ்ஜிது அக்ஸாவைப் பற்றிய குறிப்பு திருக்குர்ஆனில் இவ்வாறு காணப்படுகிறது:

سُبْحٰنَ الَّذِیْ اَسْرٰی بِعَبْدِهٖ لَیْلاً مِنَ الْمَسْجِدِ الْحَرَامِ اِلَی الْمَسْجِدِ الْاَقْصَا الَّذِیْ بٰرَكْنَا حَوْلَهٗ

பொருள்: “இரவு நேரத்தில் தனது அடியாரை மஸ்ஜிது ஹராமிலிருந்து (அதாவது பைத்துல்லாஹ்விலிருந்து) மஸ்ஜிது அக்ஸாவின் பக்கம் கொண்டு சென்ற அவன் தூயவன். மேலும் அவன் அதன் சுற்றுப்புறத்திற்கு அருளை வழங்கினான்.” (திருக்குர்ஆன் 17:2)

சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் (இந்த வசனத்தின் விளக்கவுரையாக) இவ்வாறு கூறுகிறார்கள்:

“இந்த இடத்தில் ‘மஸ்ஜிது அக்ஸா’ (மிகவும் தொலைவிலுள்ள மஸ்ஜிது) என்பதன் கருத்து, எருசலத்தில் உள்ள மஸ்ஜிது அல்ல. மாறாக, காலத்தின் வெகுதொலைவின் அடிப்படையில் இறைவனின் பார்வையில், மஸ்ஜிது அக்ஸாவாக (அதாவது மிகவும் தொலைவிலுள்ள மஸ்ஜிதாக) இருக்கின்ற வாக்களிக்கப்பட்ட மஸீஹின் மஸ்ஜிது ஆகும்.”

(நூல் குத்பா இல்ஹாமிய்யா பக்கம் 19 ரூஹானீ கஸாயின் தொகுதி 16 பக்கம் 19)

“இடத்தைப் பொருத்தவரை, இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மஸ்ஜிது ஹராமிலிருந்து (அதாவது பைத்துல்லாஹ்விலிருந்து) பைத்துல் முகத்தஸ் வரை சென்றடைய வைத்திருந்தான்.” (குத்பா இல்ஹாமிய்யா பக்கம் 21)

“காலத்தைப் பொருத்தவரை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலமாக இருந்த அவர்களுடைய இஸ்லாத்தின் கம்பீரமான காலத்திலிருந்து, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலமாகிய இஸ்லாத்தின் அருளுக்குரிய காலம் வரை சென்றடைய வைத்து விட்டான்.” (குத்பா இல்ஹாமிய்யா பக்கம் 21)

மேற்குறிப்பிடப்பட்ட ஹதீஸ் மற்றும் இன்ன பிற ஹதீஸுகளையும் பற்றி சிந்தித்துப் பார்த்தால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தோற்றத்திற்குப் பிறகு ஆன்மீக மற்றும் மார்க்கப் பயன்களைப் பெறுவதற்கு மதீனாவிலுள்ள மஸ்ஜிது ஆகிய ‘மஸ்ஜிது நபவீ, கானா கஅபா’, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ‘மஸ்ஜிது அக்ஸா’ ஆகியவற்றின் பக்கம் பயணம் மேற்கொள்வதைப் பற்றியே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு அறிவுரை வழங்கியிருந்தார்கள் என்பது தெளிவாகிறது. மறுபக்கம் அல்லாஹ் சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் இல்ஹாம் மூலமாக பலமுறை இவ்வாறு கூறினான்:

يَأتُوْنَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيْقٍ

(ய.்.தூன மின் குல்லி .்.பஜ்ஜின் அமீக்).

அதாவது “மக்கள் எந்த அளவுக்கு மிக அதிகமாக உம்மை நோக்கி வருவார்கள் என்றால், அதன் காரணமாக அவர்கள் கடந்து வரும் பாதைகள் பள்ளமாகி விடும்.” (தஸ்கிரா பக்கம் 39 காதியான். பதிப்பு டிசம்பர் 2006 காண்க).

சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 1891 -ஆம் ஆண்டு ஜல்ஸா சாலானா எனும் ஆண்டு மாநாட்டை துவக்கி வைக்கும் நேரத்தில் இவ்வாறு கூறினார்கள்:

“இந்த மாநாட்டை மனிதனுடைய சாதாரண மாநாடுகளைப் போன்று கருதாதீர்கள். இது எத்தகைய விஷயம் என்றால், அதன் கலப்பற்ற உண்மைக்கான ஆதரவையும், இஸ்லாத்தின் கலிமாவை உயர்த்துவதையும் அடிப்படையாகக் கொண்டது ஆகும். இந்தத் தொடரின் அடிக்கல்லை இறைவன் தனது கைகளால் வைத்திருக்கிறான். மேலும் இதற்காக அவன் சமுதாயங்களை ஆயத்தம் செய்திருக்கிறான். அவை கூடிய விரைவில் இதில் வந்து சேரும்.” (மஜ்முஆ இஷ்திஹாராத் தொகுதி 1 பக்கம் 341)




ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த வாசகத்தில், ‘சமுதாயங்கள் கூடிய விரைவில் இதில் வந்து சேரும்’ என்ற குறிப்பு இருக்கிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸில், لا تُشَدُّ الرِّحَالُ (லா துஷெத்துர் ரிஹாலு) ‘சந்திப்பதற்காக வாகனங்களை ஆயத்தம் செய்யுங்கள்’ என்ற வழிகாட்டல் இருக்கிறது. (ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாகிய) எஜமானரின் கூற்றும், (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ் ஸலாம் ஆகிய) தொண்டரின் கூற்றும் மிகவும்

மகத்தான முறையில் நிறைவேறிக் கொண்டிருகின்றன் மேலும் மறுமை வரை நிறைவேறிக் கொண்டே செல்லும் - இன்ஷா அல்லாஹ்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தமது உருது கவிதை ஒன்றில் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்:

زمین قادیان اب محترم ہے ہجوم خلق سے ارض حرم ہے

(ஸமீனே காதியான் அப் முஹ்தரம் ஹே. ஹுஜூமே கல்க் ஸே அர்ஸே ஹரம் ஹே)

பொருள்: இப்போது காதியான் பூமி மதிப்பிற்குரியதாக இருக்கிறது. மக்களின் கூட்டத்தால் புனித நிலமாக இருக்கிறது.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

قَالَ رَسُوْلُ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ یَخْرُجُ رَجُلٌ مِّنْ وَّرَاۤءِ النَّھْرِ-------

رَوَاہُ اَبُوْ دَاوُد (سنن ابی دَاوُد کتابالمھدی)

பொருள்: நதியின் பின்புறமிருந்து ஒரு நபர் தோன்றுவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சுனன் அபீதாவூது. கிதாபுல் மஹ்தி)

இந்த ஹதீஸுக்கு முற்றிலும் ஏற்ப சய்யிதுனா இமாம் மஹ்தியும், வாக்களிக்கப்பட்ட மஸீஹுமாகிய மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் பியாஸ் (Beas) நதிக்கு சில மைல் தொலைவில் மேற்கில் அமைந்துள்ள காதியானில் பிறந்தார்கள். அதே போன்று, ஹஸ்ரத் அலி பின் ஹம்ஸா இஷ்ராத்தே ஃபரீதீ அவர்கள் எழுதிய 'ஜவாஹிருல் அஸ்ரார்' நூலின் பக்கம் 70-ல் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

یَخْرُجُ الْمَھْدِیُّ مِنْ قَرْیَۃٍیُّقَالُ لَھَاکَدْعَہ

(யக்ருஜுல் மஹ்திய்யு மின் கர்யதின் யுகாலு லஹாகத்ஆ)

பொருள்: 'கத்ஆ' என்று அழைக்கப்படும் கிராமத்தில் இருந்து மஹ்தி தோன்றுவார். (சான்று: மவ்லானா தோஸ்து முஹம்மது ஷாஹிது அவர்கள் எழுதிய 'சவ்திவீன் சதீகீ கைர் மஃமூலீ அஹிமிய்யத்' பக்கம் 89)

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மிகப் பெரிய வரலாற்றாசிரியரும், அல்ஹகம் பத்திரிகையின் ஆசிரியருமான ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி சாஹிப் இர்ஃபானீ அவர்கள் எழுதுகின்றார்கள்:

"..........ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றும் இடம் 'கத்ஆ' என்று வந்துள்ளது......... (கத்ஆ எனும் காதியான் என்ற) இந்த கிராமம் சரியாக 33 டிகிரி பூமத்தியரேகையில் அமைந்துள்ளது.

மேலும் இது டமாஸ்கஸ் அமைந்திருக்கின்ற அதே பூமத்திய ரேகையில் அமைந்துள்ள கிராமம் ஆகும். மேலும் (காதியான் ஆகிய) இதன் திசை டமாஸ்கஸிலிருந்து கிழக்கு நோக்கியே இருக்கிறது என்பது வெளிப்படையானது. ஹஸ்ரத் மிர்ஸா ஹாதீ பேக் சாஹிப் அவர்கள் இந்த அளவுக்கு மிகத் தொலைவான பயணம் மேற்கொண்டவாறு கடந்து சென்று ஒரு காட்டில் ஏன் தங்கியிருந்தார்கள் என்பது அவர்களின் கற்பனையிலும் இல்லாதிருந்தது. ஆனால் இறைவனின் எந்த ஞானம் அவர்களை (ஈரானிலுள்ள ஒரு தொன்மையான மாநிலமாகிய) கிழக்கு நாட்டிலிருந்து கஷ்டங்களை சகித்துக் கொண்டவாறு பஞ்சாபை நோக்கி வெளியேற்றியதோ அதுவே ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களின் இந்த ஹதீஸின் நோக்கம் நிறைவேற வேண்டும் என்பதற்காக அவர்களை இங்கு குடிபெயரத் தூண்டியது. அந்த ஹதீஸில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றுவது டமாஸ்கஸுக்கு கிழக்குத் திசையில் இருக்கும் என்று கூறியிருந்தார்கள். அதன்படி, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இதன் பக்கம் இவ்வாறு சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்:

از کلمہ منارۂ شرقی عجب مدار چوں خودزمشرق است تجلی نیّرم

(அஸ் கலிமா மினாரயே ஷர்கீ உஜூப் மதார். சூன் குத்அஸ் மஷ்ரிக் அஸ்த் தஜல்லி நய்யரம்).

பொருள்: எனது சூரியனின் தோற்றம் மேற்கிலிருந்தே உதித்திருக்கும் நிலையில், கிழக்கிலுள்ள மினாரா விவகாரத்தினால் நீர் வியப்படையாதீர். (ஹயாதுன் நபி சீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது தொகுதி 1 பக்கம் 21-22 பதிப்பு 1915)

## முந்தைய மார்க்க நூல்களில் காதியானைப் பற்றிய குறிப்பு


இஞ்சீலில் 'ஒரு புதிய எருசலேம்' பற்றிய குறிப்பு கீழ்வரும் சொற்களில் வந்திருக்கிறது:

"பரலோகத்திலிருந்து வருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன் மேல் எழுதுவேன்." (வெளிப்பாடு யோவான் 3:12)

மேலும் இதே எருசலேம் பற்றி பழைய ஏற்பாட்டில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளன:

"எருசலமே! உன் மதில்களின் மேல் கண்காணிப்பாளர் -களை நியமித்திருக்கிறேன்." (ஏசாயா 62:6)

"அந்நாளிலே ஜீவ தண்ணீர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டு பாதி, கிழக்குச் சமுத்திரத்துக்கும், பாதி மேற்குச் சமுத்திரத்திற்கும் போய், குளிர் காலத்திற்கும், கோடைக்



காலத்திற்கும் இருக்கும். அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார். அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார். அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்.'' (சகரியா 14:8,9)

சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

''எருசலேம் என்பதன் கருத்து, உண்மையில் தாருல் அமான் (அமைதியைக் கொண்ட இல்லம்) என்பதாகும். எருசலேம் என்பதன் பொருள், அவர் அமைதியைக் காண்கிறார் என்பதாகும். அல்லாஹ் முன்னறிவிப்புகளில் அசல் சொற்களைப் பயன்படுத்துகிறான் என்பது அவனது நடைமுறை ஆகும். மேலும் அதன் பொருள், அதன் கருத்தும், உட்கருத்தும் ஆகும். அவ்வாறே பைத்துல் முகத்தஸ் அதாவது மஸ்ஜிது அக்ஸா இருக்கிறது. அந்த மஸ்ஜிதுக்கும் அல்லாஹ் மஸ்ஜிது அக்ஸா என்று பெயர் வைத்திருக்கிறான். ஏனெனில் (மிக அதிக தொலைவைக் கொண்டது என்ற பொருளைக் கொண்ட) அக்ஸாவும், 'காலத்தால் வெகுதொலைவைக் கொண்டது' என்ற அடிப்படையில் அல்லது 'இடத்தால் வெகுதொலைவைக் கொண்டது' என்ற அடிப்படையில் ஆகும். மேலும் இந்த இல்ஹாமில், اَلْمَسْجِدِالْاَقْصَاالَّذِىْ بَارَكْنَا حَوْلَہٗ (அல் மஸ்ஜிதில் அக்ஸல்லதீ பாரக்னா ஹவ்லஹூ - வெகுதொலைவிலுள்ள மஸ்ஜிதின் சுற்றுப்புறங்களில் நாம் அருளை வழங்கினோம்) என்பதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தைப் பொருத்த அளவிலான தாக்கங்களை எடுத்துரைப்பதைக் கொண்டுள்ளது. (மல்.்.பூஸாத் தொகுதி 2 பக்கம் 451).

எனவே அந்த 'புதிய எருசேலம்' என்பது காதியான் ஆகும் என்று நிரூபணமாகி விட்டது. மேலும் 'எருசலமே! உன் மதில்களின் மேல் கண்காணிப்பாளர்களை நியமித்திருக்கிறேன்' என பைபிளில் (ஏசாயா 62:6) குறிப்பிடப்பட்டுள்ள முன்னறிவிப்பின் சொல், 'தாருல் அமான்' என்பதன் மூலமாகவும் اِنِّىْ اُحَافِظُ كُلَّ مَنْ فِى الدَّارِ (இன்னீ உஹா.்.பிழு குல்ல மன் .்.பித்தார் - நிச்சயமாக நான் உன் வீட்டில் உள்ள அனைவரையும் பாதுகாப்பேன்) என்ற இல்ஹாம் மூலமாகவும் நிறைவேறிவிட்டது. (நூல்: தத்கிரா பக்கம் 379).

மேலும் '(காதியான் எனும்) இந்த புதிய எருசலேமில் இருந்தே (ஜீவ தண்ணீர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டு' என்ற சகரியா 14:9-ல் உள்ள (முன்னறிவிப்பின்படி), ஆன்மீக வாழ்வுக்கான நீர் தொடங்கியது. அது முழு உலகத்தையும் செழிப்படைய வைத்துக் கொண்டிருக்கின்றது எப்போதும் செழிப்படைய வைத்துக் கொண்டிருக்கும்.

இதைப் போன்று இந்துக்களின் வேதங்களில் காதியான் என்ற பெயர் குதூன் என்று எழுதப்பட்டுள்ளது. (சான்று: அதர்வண வேதம் காண்டம் 20 சுலோகம் 97 சவ்கம்பாவித்யா பவன், பனாரஸ் பக்கம் 474)

ஹஸ்ரத் பாபாநானக் ஜீ (ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

பஞ்சாபி மொழியில் உள்ள அந்தக் கூற்றின் பொருள்:

''ஒரு நிலக்கிழார் இருப்பார். ஆனால் அவர் நமக்கு நூறு ஆண்டுகளுக்குப் பிறகு தோன்றுவார். மேலும் அவர் பட்டாலா என்ற தாலுகாவில் இருப்பார்.'' (ஜனம் சாயீபாலாவாலிவடிசாகீ பக்கம் 251 மு.்.பீது ஆம் அச்சகம், லாஹூர்).


(தொடரும்...)



- ☛ எனது இந்த மஸ்ஜிது (அதாவது மதீனா முனவ்வராவாகிய மஸ்ஜிது நபவி), (கஅபதுல்லாஹ் ஆகிய) மஸ்ஜிது ஹராம், மற்றும் மஸ்ஜிது அக்ஸா ஆகிய மூன்று பள்ளிவாயில் –களுக்காக அன்றி, வேறு எங்கும் ஒட்டகப் பல்லக்கை ஆயத்தம் செய்ய வேண்டாம். [ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்)]
- ☛ மக்கள் எந்த அளவுக்கு மிக அதிகமாக உம்மை நோக்கி வருவார்கள் என்றால், அதன் காரணமாக அவர்கள் கடந்து வரும் பாதைகள் பள்ளமாகி விடும். [ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு பலமுறை வந்த இல்ஹாம்]
- ☛ எருசலேம் என்பதன் கருத்து, உண்மையில் தாருல் அமான் (அமைதியைக் கொண்ட இல்லம்) என்பதாகும். எருசலேம் என்பதன் பொருள், அவர் அமைதியைக் காண்கிறார் என்பதாகும்.

இப்போது காதியான் பூமி மதிப்பிற்குரியதாக இருக்கிறது. மக்களின் கூட்டத்தால் புனித நிலமாக இருக்கிறது.

[ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)]



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

15

- மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

## ஆர்ய சமாஜிகளோடு ஏற்பட்ட விவாதம் சுர்மா சஷ்மயே ஆர்யா

1886 –ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் 'சுர்மா சஷ்மயே ஆர்யா' என்னும் நூலை எழுதி வெளியிட்டார்கள். அதில் முரளீதரோடு ஹோஷியார்பூரில் நடைபெற்ற விவாதத்தைப் பற்றிய அறிக்கையும் இடம் பெற்றிருந்தது.

அந்த நூலை வெளியிடுவதற்கு ஆகும் செலவைப் பற்றி 1886 –ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் லாஹூர், அமிர்தசரஸ் போன்ற நகரங்களில் விசாரித்தார்கள். மே அல்லது ஜூன் மாதத்தில் அச்சிடும் வேலையை ஆரம்பித்தார்கள். ரமலானுக்கு முன் நூலை வெளியிட்டு விட வேண்டும் என்பது அவர்களின் எண்ணமாக இருந்தது. ஆனால் பெரும் மழை காரணமாக அந்த வேலை தாமதமானது. வேலை முடிந்து வந்த நேரத்தில் அவர்கள் அம்பாலா செல்ல வேண்டியது வந்தது. அந்த நூலை குறிப்பிட்ட தேதிக்குள் வெளியிட வேண்டும் என்பதில் அவர்கள் எவ்வளவு அக்கறை கொண்டிருந்தார்கள் என்றால், அச்சிடப்பட்ட பிரதிகளை அமிர்தசரஸிலிருந்து நேரடியாக அம்பாலாவுக்கே அனுப்பி வைக்கும்படி ரியாஸே ஹிந்த் அச்சகத்தாருக்குக் கூறிச் சென்றார்கள். அதன் மூலம் அச்சிடப்பட்ட நூலின் பக்கங்கள் வரிசை கிரமமாக இருக்கின்றனவா என்பதைத் தாமே சோதித்துப் பார்க்க எண்ணினார்கள். 1886 –ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 –ஆம் நாள் அவர்கள் காதியானுக்குத் திரும்பினார்கள். நூலை அச்சிடுவதற்கு மொத்தம் 800 ரூபாய் செலவானது. அதில் ரூ. 500 –ஐ முன்ஷீ அப்துல் ஹக் (ரலி) அவர்களிடம் கடனாகப் பெற்றிருந்தார்கள். மொத்தம் 1000 பிரதிகள் அச்சிடப்பட்டன.




அவற்றுள் 100 பிரதிகள் முஸ்லிம் அல்லாத மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. மவ்லவி நூருத்தீன் (ரலி) அவர்களும், சவுத்ரி ருஸ்தம் அலீ (ரலி) அவர்களும் இந்த நூலை விற்பனை செய்வதில் பெரிதும் உதவியாக இருந்தார்கள்.

இந்த நூலில் விவரிக்கப்பட்டுள்ள சில முக்கியமான விஷயங்கள் பின்வருமாறு:

திருக்குர்ஆனில் விவரிக்கப்பட்டுள்ள சந்திரன் இரண்டாகப் பிளந்த அதிசய நிகழ்வு பற்றி விளக்கமாகக் கூறப்பட்டது. தற்கால முஸ்லிம் அல்லாத மக்கள் தரும் ஆய்வுச் செய்திகள் இந்த வானவியல் அதிசயத்தைப் பற்றி எதுவுமே கூறாமல் இருப்பதால் இந்த அதிசய நிகழ்வின் முக்கியத்துவத்தை அவை எந்த விதத்திலும் குறைத்துவிடப் போவதில்லை. திருக்குர்ஆனின் வரலாற்று முக்கியத்துவத்தை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. திருக்குர்ஆனின் கூற்றுகளை இஸ்லாத்தின் எதிரிகள் எளிதில் மறுக்கவும் குறை கூறவுமே செய்வர். அப்படிப்பட்டவர்கள் இந்நிகழ்ச்சி பற்றி மௌனமாக இருந்தது இந்த அதிசயம் ஒப்புக் கொள்ளப்பட்ட ஓர் உண்மை நிகழ்வாகும் என்பதையே காட்டுகிறது. மகாபாரதத்தின் மோக்சபர்வான் சந்திரன் இரண்டாகப் பிளவு பட்டதை பற்றிக் குறிப்பிடுகின்றது. (துஹ்ஃபயே ஹிந்த் என்னும் நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு) அதிசயங்களின் பொதுவான அர்த்தமும், அவற்றின் தன்மைகள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. இயற்கை செயல்படும் விதத்தைப் பற்றிய அறிவில் யாரும் இதுவரை முழுமை கண்டுவிடவில்லை. எனவே அறிவியலும், மார்க்கத்திற்குமிடையே எந்த விதமான உண்மையான முரண்பாட்டையும் நாம் காண முடியாது. பலமான சான்றுகள் இருக்கும் பொழுது, பலவிதத்தில் உறுதி செய்யப்படும் ஒரு நிகழ்வை அது புதிதாகவோ, வழக்கத்திற்கு மாறானதாகவோ, அதிசயமானதாகவோ இருக்கின்றது

என்பதற்காகவும், அதற்கான காரணம் புரியவில்லை என்பதற்காகவும், அறிவியலால் ஒதுக்கித் தள்ளி விட முடியாது.

அதிசயங்கள் நான்கு வகைப்படும். 1) அறிவுப்பூர்வமானவை 2) அறிவியல் பூர்வமானவை 3) ஆன்மீக அருட்கொடைகள் 4) இயற்கை விதிகளில் ஏற்படும் குறுக்கீடுகள். இவற்றுள் நான்காவதை விட முதல் மூன்றும் முக்கியமானவை.

ஆன்மாவின் படைப்பு, அவற்றின் தன்மை, அவற்றின் ஆற்றல்கள் ஆகியவை பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. ஹிந்து மதம் கூறும் ஈடேற்றக் கொள்கையும், சொர்க்கத்தைப் பற்றிய முஸ்லிம்களின் நம்பிக்கையும் ஒப்பு நோக்கப்படுகின்றது.

அந்த நூலின் இறுதியில் வேதங்களையும் திருக்குர்ஆனையும் ஒப்பு நோக்கிப் பார்க்குமாறு இந்தியா முழுவதுமுள்ள ஆரிய சமாஜத்தினருக்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். மார்க்க ரீதியான ஒரு பிரச்சினை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதனைப் பற்றி வேதங்களும் திருக்குர்ஆனும் என்ன கூறுகின்றன என்பதைப் பற்றி அந்தந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் எடுத்துக் கூற வேண்டும் என்று ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஆலோசனை கூறினார்கள். திருக்குர்ஆனை விட வேதங்கள் சிறந்தவை என்று எடுத்துக் கூறும் விதத்தில் ஒரு நூலை எழுதி வெளியிடும் ஆரிய சமாஜிக்கு தாம் பரிசு வழங்கத் தயாராக இருப்பதாக அவர்கள் அறிவித்தார்கள். மூன்று மாத காலத்திற்குள் அவ்வாறு ஒரு நூலை எழுத யாரும் முன்வரவில்லையென்றால், அதன் பின்னரும் ஆரிய சமாஜத்தினர் இஸ்லாத்தைக் குறை கூறுவதை நிறுத்தாவிட்டால் இந்த விஷயத்தை முடிவுக்குக் கொண்டு வர ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இன்னொரு வழியைக் கூறினார்கள். இஸ்லாத்தின் தற்காப்புக்கு வேறு எந்த வழியும் இல்லை என்பதால் இதுதான் கடைசி வழிமுறையாக இருக்க முடியும் என்றும் கூறினார்கள். இந்த வழிமுறையே அரபு மொழியில் 'முபாஹலா' என்று அழைக்கப்படுகிறது.

## முபாஹலாவின் துவக்கம்

இஸ்லாத்தில் முபாஹலா என்பது அதன் நிறுவனரோடு ஆரம்பமானது. நாம் திருக்குர்ஆனில் இவ்வாறு காண்கிறோம்:

"இது உமது இறைவனிடமிருந்து வந்த உண்மையாகும். எனவே நீர் ஐயம் கொள்பவர்களைச் சார்ந்தவராக வேண்டாம். இப்பொழுது உம்மிடம் (இறை) ஞானம் வந்துவிட்ட பின்னர் உம்மிடம் அவரைக் குறித்து வாதாடுபவனிடம் நீர் கூறுவீராக: வாருங்கள்! நாங்கள் எங்களுடைய ஆண்மக்களையும், நீங்கள் உங்கள் ஆண்மக்களையும், நாங்கள் எங்கள் பெண்களையும் நீங்கள் உங்கள் பெண்களையும், நாங்கள் எங்களைச் சேர்ந்தவர்களையும், நீங்கள் உங்களைச் சேர்ந்தவர்களையும் அழைத்துக் கொள்வோம். பின்னர் உருக்கமாகப் பிரார்த்தனை செய்து பொய்யர்கள் மேல் அல்லாஹ்வின் சாபம் என வேண்டுவோம்." (ஆல இம்ரான் 3:61,62)

ஹிஜ்ரீ 10 –ஆம் ஆண்டில் நஜ்ரானிலிருந்து ஒரு கிறித்தவக் குழு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் காண வந்தது. அறுபது பேர் கொண்ட அந்தக் குழுவுக்கு அப்துல் மஸீஹ் என்பவர் தலைவராக இருந்தார். அந்தக் குழுவினருடன் ஆன சந்திப்பு ஒரு பள்ளிவாசலில் நடைபெற்றது. ஈஸா (அலை) அவர்கள் கடவுள் இல்லையென்றும், ஒரு மனிதரும், இறைதூதருமாவார் என்றும் பெருமானார் (ஸல்) அவர்கள் விளக்கிக் கூறினார்கள். இந்த விவாதம் உச்ச கட்டத்தை அடைந்த போதும், கிறித்தவர்கள் தங்களின் தவறான நம்பிக்கையிலேயே நிலைத்து நின்றார்கள். இறுதியாகப் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தக் குழுவினரிடம் பொய்மையில் நிலைத்து நிற்கும் அணியின் மீது இறைவனின் சாபம் உண்டாவதாக எனத் தம்மோடு உளப்பூர்வமாகப் பிரார்த்திக்கும் படிக் கேட்டுக் கொண்டார்கள். இந்தப் பிரார்த்தனையின் விளைவைக் கண்டு கொள்வதற்குரிய காலக்கெடுவாக ஓராண்டு காலம் நிர்ணயிக்கப்பட்டது. இதுவே முபாஹலா என்று அழைக்கப்படுகின்றது.

முபாஹலா என்பது மிகவும் எச்சரிக்கையுடன் அணுக வேண்டிய ஒரு விஷயமாகும். அது ஒரு விஷயத்தின் மீது ஒருவர் கொண்டிருக்கும் உறுதியான நம்பிக்கையால் விளைந்த துணிச்சலை வெளிப்படுத்தும் செயலாகும். ஊசலாட்டமும், உறுதியான நிலைப்பாடும் இல்லாத மனமும் கொண்ட ஒருவரால் ஒருபோதும் இந்தச் சோதனையில் இறங்க முடியாது. எனவே இந்தக் குழுவினர் இந்தச் சவாலை ஏற்கத் துணியவில்லை. முழுமையான மதச் சுதந்திரத்தோடு அவர்கள் திரும்பிச் சென்றனர்.

மார்க்கம் என்பது மனிதனின் தனிப்பட்ட விஷயம்தான். இருந்த போதிலும் இறை சாபத்திற்காகப் பிரார்த்திப்பது என்பதைக் கேட்ட மாத்திரத்தில் கலக்கமடைகின்ற சில மனிதர்களும் இருக்கத்தான் செய்வர். வேதங்களின் போதனைகளில் 'உங்கள் எதிரிகளையும் நேசியுங்கள்' என்று காணப்படுவதால் இது வேதங்களுக்கு எதிரான காரியம் என்று



கிறித்தவர்கள் கருதக்கூடும். எனவே மார்க்க சம்பந்தமான கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்காக எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தேர்ந்தெடுத்த இந்த முறை பற்றிச் சற்று விளக்கிக் கூறுவது அவசியமாகிறது.

தீமையை நன்மையால் வெற்றி கொள்வதற்குப் பல வழிகளை இஸ்லாம் கூறுகிறது. நம்முடைய செயல்கள் மனித நேயம் அற்றவையாக இருந்தால் அவை அனைத்தும் வீணானவையே ஆகும். அதே நேரத்தில் மனித நேயம் என்பது கண்மூடித் –தனமாகவும் இருக்கக் கூடாது என்று இஸ்லாம் போதிக்கின்றது. ஏற்றத்தாழ்வை இஸ்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

நாம் பைபிளில் பின்வருமாறு படிக்கிறோம்:

“தேவனே! அவர்களைக் குற்றவாளிகளாகத் தீரும்; அவர்கள் தங்கள் ஆலோசனைகளாலேயே விழும்படிச் செய்யும். அவர்கள் துரோகங்களினுடையே திரட்சியினிமித்தம் அவர்களைத் தள்ளிவிடும். உமக்கு விரோதமாகக் கலகம் பண்ணினார்களே!” (சங்கீதம் 5:10)

“கர்த்தாவே! நீர் என் வழக்காளிகளோடே வழக்காடி என்னோடு யுத்தம் பண்ணுகிறவர்களோடே யுத்தம் பண்ணும்....

....எனக்குத் தீங்கு செய்ய நினைக்கிறவர்கள் நாணமடைவார்களாக!” (சங்கீதம் 35:1–4)

“மரணம் அவர்களைத் தொடர்ந்து பிடிப்பதாக! அவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்குவார்களாக!” (சங்கீதம் 55:15)

“அவன் ஜெபம் பாவமாகக்கடவது. அவன் நாட்கள் கொஞ்சமாகக் கடவது. அவன் உத்தியோகத்தை வேறொருவன் பெறக்கடவன். அவன் பிள்ளைகள் திக்கற்றவர்களும், அவன் மனைவி விதவையுமாகக் கடவர்கள். அவன் பிள்ளைகள் அலைந்து திரிந்து பிச்சையெடுத்து, தங்கள் பாழான வீடுகளிலிருந்து இரந்துண்ணக் கடவர்கள். கடன் கொடுத்தவன் அவனுக்கு உள்ளது எல்லாவற்றையும் அபகரித்துக் கொள்வானாக! அவன் பிரயாசத்தின் பலனை அந்நியர் பறித்துக் கொள்ளக் கடவர்கள். அவனுக்கு ஒருவரும் இரக்கங் –காண்பியாமலும், அவனுடைய திக்கற்ற பிள்ளைகளுக்குத் தயவு செய்யாமலும்போவார்களாக! அவர் சந்ததியார் நிர்மூலமாகக் கடவர்கள். இரண்டாந் தலைமுறையில் அவர்கள் பேரற்றுப் போவதாக!” (சங்கீதம் 109:7–13)

“உம்முடைய கிருபையின்படி என் சத்துருக்களை அழித்து என் ஆத்துமாவை ஒடுக்குகிற யாவரையும் சுங்காரம் பண்ணும். நான் உமது அடியேன்” (சங்கீதம் 143:12)

இயேசு நாதரால் கூட சபிப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ள முடியவில்லை. அவர் கூறுகிறார்:

“மாயக்காரராகிய வேதபாதகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம் பண்ணி விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள். இதினிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள்.” (மத்தேயு 23:14)

மீண்டும் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்:

“அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும் நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்.” (மத்தேயு 25:42)

மாற்கு 9:42 –ல் இயேசு பின்வருமாறு கூறுகிறார்:

“என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டி, சமுத்திரத்தில் அவனைத் தள்ளிப்போடுகிறது அவனுக்கு நலமாயிருக்கும்.”

இப்படிப்பட்ட சாபங்கள் பழி தீர்த்துக் கொள்பவையோ, உண்மையான அன்போடு பொருந்திப் போகாதவையோ அல்ல. இவற்றின் உண்மையான நோக்கம் சங்கீதம் 58:11 –ல் இவ்வாறு தெளிவாக்கப்பட்டுள்ளது:

“அப்பொழுது மெய்யாய் நீதிமானுக்குப் பலன் உண்டென்றும், மெய்யாய் பூமியிலே நியாயஞ் செய்கின்ற தேவன் உண்டென்றும் மனுஷன் சொல்லுவான்.”



நன்மக்களைத் தீயவர்களிடமிருந்து பிரித்து அறிவதற்காகவே ஓர் இறை தூதர் ஈடுபடுகின்றார். அதன் மூலம் மக்களை நன்மையின் பக்கம் ஈர்க்கவும், தீயவற்றிலிருந்து விலக்கவும் முடியும்.

முபாஹலா என்னும் இந்தப் பிரார்த்தனைப் போட்டியில் எதிரியின் மீது இறை சாபம் இறங்குமாறு பிரார்த்திக்கப் –படுவதில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மாறாக பொய்யில் நிலைத்து நிற்பவர் மீது இறை சாபம் இறங்குமாறு வேண்டுதல் செய்யப்படுகிறது. சம்பந்தப்பட்ட இரு சாராரும் விருப்பத்துடனேயே இவ்வாறு பிரார்த்தனை செய்ய ஒப்புக் கொள்வதால் இதில் வெறுப்புணர்ச்சிக்கோ, கெட்ட எண்ணத்திற்கோ இடமில்லை. முழுமையான நம்பிக்கையோடு தீர்ப்பு இறைவனிடம் விடப்படுகிறது. கிட்டத்தட்ட இதையொத்த ஒரு நிகழ்வு சங்கீதம் 7:3–5 –ல் காணப்படுகிறது.

"என் தேவனாகிய கர்த்தாவே! நான் இதைச் செய்ததும், என் கைகளில் நியாயக் கேடிருக்கிறதும், என்னோட சமாதானமாய் இருந்தவனுக்கு நான் தீமை செய்ததும், காரணமில்லாமல் எனக்குச் சத்துருவானவனை நான் கொள்கையிட்டதும் உண்டானால், பகைஞன் என் ஆத்துமாவைத் தொடர்ந்து பிடித்து என் பிராணனைத் தரையில் தள்ளி மிதித்து என் மகிமையைத் தூளிலே தாழ்த்தக்கடவன்." (சங்கீதம் 7:3–5)

இப்படிப்பட்ட பிரார்த்தனையின் விளைவாக உண்மையான இறைதூதரின் எதிரி அந்த இறைதூதரை வெற்றி கொள்ள முடியாமல் பார்த்துக் கொள்ளப்படுகிறது. இந்த இறைதூதரின் கண்ணியம் முழுமையாக எடுத்துக் காட்டப்பட்டு நிலைநிறுத்தப் –படுகிறது.

அந்த நூலில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் முஸ்லிம் அல்லாத மாற்றுமத நண்பர்களுக்கு இன்னுமொரு வேண்டுகோளையும் முன் வைத்திருந்தார்கள். அதில் அவர்கள் காதியானுக்கு வந்து தம்மோடு தங்கியிருந்தால், இஸ்லாத்தின் சிறப்பை எடுத்துக்காட்டும் இறை அடையாளங்களைக் காட்டித் தருவதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். இதற்குப் பெரிய அளவில்



பரவலாக விளம்பரம் செய்திருந்தார்கள். ஆரம்பத்தில் உண்மையை அறிய விரும்புபவர்கள் தம்மோடு ஓராண்டு காலம் தங்கியிருக்க வேண்டும் என்று அறிவித்திருந்தார்கள். இந்த நூலில் அந்தக் காலக் கெடுவை 40 நாட்களாகக் குறைத்திருந்தார்கள். இந்த அழைப்பை ஏற்றுக் கொள்வதற்குரிய காலக் கெடுவாக சுர்மா சஷ்மயே ஆரிய நூல் வெளியிடப்பட்டதில் இருந்து மூன்று மாத காலத்தை நிர்ணயித்தார்கள். அந்தக் காலக் கெடு 1886 –ஆம் ஆண்டு டிசம்பர் 20 –ஆம் தேதியோடு முடிவடைந்தது. ஆனால் யாரும் அந்த அழைப்பை ஏற்க முன் வரவில்லை.

இந்த நூல் வெளியிடப்பட்ட பின் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒரு பிரசுரத்தையும் வெளியிட்டார்கள். ஆனால் சமாஜத்தைச் சேர்ந்த யாராவது ஒருவர் மறுப்புரை எழுதி, கிறித்தவ அல்லது பிராமண சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு நடுவரால் அந்த மறுப்புரை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டால், அந்த ஆரியருக்குத் தாம் ரூபாய் 500/– சன்மானமாக வழங்குவதாக அறிவித்தார்கள். சுர்மயே சஷ்மயே ஆரியா என்னும் நூலில் எடுத்து வைத்துள்ள வாதங்களை மறுப்பதில் யாராவது ஒருவர் வெற்றி பெற்று விட்டதாக லாஹூர் ஆர்ய சமாஜ செயலாளரான முன்ஷீ திவான் தாஸ் ஒரு பொதுக்கூட்டத்தில் சத்தியம் செய்து அறிவித்தாலும் தாம் பரிசுத்தொகையை வழங்குவதாகவும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அறிவித்திருந்தார்கள். அவ்வாறு சத்தியம் செய்து அறிவித்ததில் இருந்து ஓர் ஆண்டு காலத்திற்குள் இறைவனின் சாபம் முன்ஷீயின் மீது இறங்கினால் அவர் பொய்யான தீர்ப்பு வழங்கியதற்கான ஆதாரமாக அது அமையும் எனவும் குறிப்பிட்டார்கள்.

நூர் அஃப்ஷான் என்னும் பத்திரிகை தனது 1887 –ஆம் ஆண்டு ஜனவரி 6 –ஆம் தேதி இதழில் பின்வருமாறு எழுதியது:

"(சுர்மயே சஷ்மயே ஆர்யா என்ற) இந்த நூலைப் பற்றிய உண்மையைக் கூற வேண்டுமானால், இது ஆர்ய சமாஜத்தின் உண்மை வடிவை உலகிற்கு உணர்த்தி விட்டது. இது சமாஜத்தை அழித்து விட்டது. இந்த நூலில் தரப்பட்டுள்ள தீர்க்கமான வாதங்களை மறுத்துரைப்பது என்பது இயலாத காரியம் என்று கூறுவது உண்மையும் நீதியும் ஆகும்."

மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி தமது இஷாஅத்துஸ் ஸுன்னா என்ற பத்திரிகை பாகம் 9 எண் 5,6 பக்கம் 145–148 –ல் இந்த நூலுக்காக 14 பக்கங்களை ஒதுக்கியிருந்தார். நூலுக்கு மதிப்புரை எழுதுவதற்குப் பதிலாக விளக்கமாக எழுதப்பட்டிருந்த அந்த நூலின் பல மேற்கோள்களை அப்படியே பதிப்பித்திருந்தார். ஒவ்வொரு முஸ்லிமும் நூலின் பத்து அல்லது இருபது பிரதிகளை வாங்கி இந்து நண்பர்களுக்கு வழங்க வேண்டுமென்றும், அதன் மூலம் இஸ்லாத்திற்கு எதிரான ஆர்ய சமாஜத்தின் எதிர்ப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் கேட்டுக் கொண்டிருந்தார்.

சுர்மயே சஷ்மயே ஆர்யா என்ற நூல் வெளியீட்டிற்குப் பிறகு மற்றுமொரு பிரசுரம் வெளியிடப்பட்டது. அதில் மார்க்க ரீதியான கருத்து வேறுபாடுகளைக் களைய இன்னொரு வழிமுறையை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தெரிவித்தார்கள். அதன்படி, இஸ்லாத்தின் எதிரிகள் தங்கள் அபிப்ராயத்தில் எந்த விதத்திலும் பதிலளிக்கவே முடியாது என்று கருதும் இரண்டு அல்லது மூன்று இஸ்லாத்திற்கு எதிரான ஆட்சேபணைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அந்த ஆட்சேபணைகளுக்கு இஸ்லாத்தின் சார்பில் பதில் அளிப்பார்கள். அவ்வாறு அவர்களால் திருப்திகரமாக பதிலளிக்க முடியாவிட்டால், ஒவ்வோர் ஆட்சேபணைக்கும் ரூபாய் 50/– என்ற விதத்தில் நஷ்ட ஈடு வழங்குவார்கள். ஆனால் திருப்திகரமாக பதில் அளிக்கும் விதத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் வெற்றி பெற்று விட்டால், ஆட்சேபணையை எழுப்பிய அந்த எதிரி இஸ்லாத்தைத் தழுவ வேண்டும் என்றும் அவர்கள் அறிவித்தார்கள்.

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

சிறுவர் பகுதி

# மார்க்க அறிவுப் புத்தகம்




**தமிழாக்கம்: M.M. இப்ராஹீம்**

ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் உத்தரவிற்கிணங்க அஹ்மதி குழந்தைகளின் மார்க்க அறிவை மேம்படுத்தும் நோக்கத்தில் ஜனாப் ரஃத் அஹ்மத் சௌத்ரி சாஹிப் அவர்களால் A BOOK OF RELIGIOUS KNOWLEDGE என்ற தலைப்பில் எழுதப் பெற்ற இந்நூல் 1977-ம் ஆண்டு ஆகஸ்டு 3 -ஆம் தேதி வெளியிடப்பட்டதாகும். அந்நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு இங்கு தரப்படுகிறது.

இந்த மார்க்கக் கல்வி ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன:

1. இஸ்லாம் (73 கேள்விகள்)
2. திருக்குர்ஆன் (25 கேள்விகள்)
3. இஸ்லாமிய வரலாறு (91 கேள்விகள்)
4. அஹ்மதிய்யத் (147 கேள்விகள்)
5. ஒப்பீட்டு மார்க்கக் கல்வி (38 கேள்விகள்)

## 2. திருக்குர்ஆன்

1. 'குர்ஆன்' என்பதன் பொருள் என்ன?

'குர்ஆன்' என்பதன் பொருள் 'அடிக்கடி ஓதப்படக் கூடியது', 'மனனம் செய்யப்படக்கூடியது', 'ஒப்புவிக்கப் -படக்கூடியது' என்பதாகும்.

2. திருக்குர்ஆனில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?

திருக்குர்ஆனில் 114 அதிகாரங்கள் உள்ளன.

3. திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள சில நபிமார்களின் பெயர்களைக் கூறுக:

1) ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை)
2) ஹஸ்ரத் ய∴கூப் (அலை)
3) ஹஸ்ரத் யூசுப் (அலை)
4) ஹஸ்ரத் தாவூது (அலை)
5) ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை)
6) ஹஸ்ரத் ஈஸா (அலை)
7) ஹஸ்ரத் இஸ்ஹாக் (அலை)
8) ஹஸ்ரத் மூஸா (அலை)
9) ஹஸ்ரத் சுலைமான் (அலை)
10)ஹஸ்ரத் முஹம்மது (ஸல்)

4. திருக்குர்ஆனில் முஹம்மது எனும் பெயர் எத்தனை இடங்களில் வந்துள்ளது?

நான்கு முறை வந்துள்ளது.

5. திருக்குர்ஆனில் கூறப்பெற்றுள்ள பத்து மிருகங்களின் பெயர்களைக் கூறுக:

ஒட்டகம், செம்மறி ஆடு, பசு மாடு, நாய், பன்றி, குதிரை, கழுதை, சிங்கம், யானை, குரங்கு முதலியன.



6. திருக்குர்ஆனில் கூறப்பெற்றுள்ள ஐந்து பழங்களின் பெயர்களைக் கூறுக:

மாதுளை, திராட்சை, அத்தி, வாழை, பேரீச்சம்பழம் முதலியவையாகும்.

7. திருக்குர்ஆன் முழுவதும் அருளப்பட எத்தனை ஆண்டுகள் ஆயின?

திருக்குர்ஆன் முழுவதும் அருளப்பட மொத்தம் 23 ஆண்டுகள் ஆயின.

8. திருக்குர்ஆன் எந்த மொழியில் அருளப்பட்டது?

மொழிகளின் தாயான அரபு மொழியிலேயே திருக்குர்ஆன் அருளப்பட்டது. இந்நாள் வரையில் அதன் உரையில் ஒரு சிறிதும் கூட்டவோ குறைக்கவோ செய்யப்படவில்லை.

9. 'லைலத்துல் கத்ர்' என்றால் என்னவென்று தெரியுமா?

திருக்குர்ஆன் முதன்முதலில் அருளப்பட்டது ரமலான் மாதத்திலாகும். ரமலான் கடைசி பத்து இரவுகளில் ஒற்றைப்படையில் வரும் ஓர் இரவை 'லைலத்துல் கத்ர்' என்கிறோம். 'லைலத்துல் கத்ர்' என்பதற்கு 'நற்பேற்றுக்குரிய இரவு' என்பது பொருளாகும்.

10. திருக்குர்ஆனின் முதல் இரு அத்தியாயங்களையும் கடைசி இரு அத்தியாயங்களையும் குறிப்பிடுக:

'அல் ∴பாத்திஹா' மற்றும் 'அல் பகரா' ஆகியன முதல் இரு அத்தியாயங்களாகும். 'அல் ∴பலக்' மற்றும் 'அந்நாஸ்' ஆகியன கடைசி இரு அத்தியாயங்களாகும்.

11. திருக்குர்ஆனின் போதனைகளைப் பாதுகாப்பதாக இறைவன் வாக்குறுதி அளித்துள்ள ஒரு திருக்குர்ஆன் வசனத்தைக் கூறுக:

அத்தியாயம் 15, வசனம் 10- ல் 'நிச்சயமாக நாமே இந்தக் குர்ஆனை இறக்கினோம். மேலும் நாமே இதனைப் பாதுகாப்போம்' என்று கூறுகிறான்.

12. திருக்குர்ஆனின் மிக நீண்ட மற்றும் மிகக் குறுகிய அதிகாரங்களைக் குறிப்பிடுக:

அதிகாரம் 'அல் பகரா' மிக நீண்ட அதிகாரமாகும். 'அல் கவ்ஸர்' மிகக் குறுகிய அதிகாரமாகும்.

13. திருக்குர்ஆனின் எந்த அதிகாரம் 'அளவற்ற அருளாளனும், மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்' என்ற வேண்டுதலுடன் துவங்கவில்லை?

அதிகாரம் 9 'அத்தவ்பா' இந்த வேண்டுதலுடன் துவங்கவில்லை.

14. திருக்குர்ஆனின் எந்த அதிகாரத்தில் மேலே கூறப்பட்டுள்ள வேண்டுதல் இருமுறை இடம் பெற்றுள்ளது?

27-வது அதிகாரம் 'அந்நம்லில்' மேற்கூறப்பெற்றுள்ள வேண்டுதல் இருமுறை இடம்பெற்றுள்ளது.

15. திருநபித் தோழர் ஒருவரின் பெயர் இடம் பெற்றுள்ள அதிகாரம் எது?

'அல் அஹ்ஸாப்' என்னும் 33-வது அத்தியாயத்தில் ஹஸ்ரத் ஸெய்து (ரலி) அவர்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

16. திருக்குர்ஆனின் எந்த வசனங்கள் முதலில் இறங்கப் பெற்றன?

சூரா 'அல் அலக்' என்னும் 96-வது அதிகாரத்தின் 2 முதல் 6 வரை உள்ள வசனங்களான:

"(எல்லாவற்றையும் படைத்த உமது இறைவனின் பெயரால் ஓதுவீராக! அவன் மனிதனை உறைந்த திரவத்திலிருந்து படைத்தான். ஓதுவீராக! உமது இறைவன் மாபெரும் கண்ணியத்திற்குரியவனாவான். அவன எழுதுகோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான். அவன் மனிதனுக்கு அவன் அறியாததைக் கற்றுக் கொடுத்தான்)"

ஆகிய இவையே முதன் முதலில் அருளப்பெற்ற திருக்குர்ஆன் வசனங்களாகும்.



17. 'காத்தமுன் நபிய்யீன்' என்ற சொற்றொடர் இடம்பெற்றுள்ள அதிகாரம் எது?

திருக்குர்ஆனின் 33-வது அதிகாரமான 'அல் அஹ்ஸாப்' என்னும் அதிகாரத்தின் 41-வது வசனத்தில் இடம் பெற்றுள்ளது.

18. 'காத்தமுன் நபிய்யீன்' என்ற சொற்றொடரின் பொருள் என்ன?

மிக உயர்ந்த பதவியை உடைய இறைத்தூதர் என்று பொருள். இது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களைக் குறிக்கிறது.

19. 'ரஹ்மத்துல் லில் ஆலமீன்' என்ற சொற்றொடர் எந்த அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது?

அதிகாரம் 21 'அல் அன்பியா' வசனம் 28-ல் இச்சொற்றொடர் இடம் பெற்றுள்ளது.

20. திருநபி அவர்களுக்குப் பிறகும் நபி தோன்றுவார்கள் என்று கூறும் இரண்டு வசனங்களைக் குறிப்பிடுக:

"அல்லாஹ்விற்கும் இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பவர்கள், அல்லாஹ் அருள் புரிந்தவர்களான நபிமார்கள் (தீர்க்கதரிசிகள்), சித்தீக்குகள் (உண்மையாளர்கள்), ஷஹீதுகள் (உயிர்த் தியாகிகள்), ஸாலிஹீன்கள் (நல்லவர்கள்) ஆகியோரைச் சேர்ந்தவர்களாக இருப்பர். இத்தகையோர் (மிக்க) நல்ல நண்பர்கள் ஆவர்." (அதிகாரம் 4, வசனம் 70)

"ஆதமின் மக்களே! என் வசனங்களை உங்களுக்கு ஓதிக்காட்டக் கூடிய தூதர்கள் உங்களிடமிருந்தே நிச்சயமாக உங்களிடம் வரும் போது, இறையச்சத்தை மேற்கொண்டு திருந்திக் கொள்வோருக்கு (வருங்காலத்தைப் பற்றிய) எவ்வித அச்சமுமில்லை. அவர்கள் கவலையடையவு மாட்டார்கள்.". (அதிகாரம் 7, வசனம் 36)

21. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இயற்கை மரணம் எய்தி விட்டார்கள் என்பதைத் தெரிவிக்கும் இரு திருக்குர்ஆன் வசனங்களைக் கூறுக:


அதிகாரம் 3, வசனம் 56 -ல், "ஈஸாவே! நான் உமக்கு (இயற்கையான) மரணத்தைத் தருவேன். உமக்கு எனது சந்நிதியில் உயர்வு தருவேன்" என்றும், அதிகாரம் 5, வசனம் 118-ல், "நான் அவர்களுடன் இருந்த காலம் வரை அவர்களுக்கு நான் சாட்சியாக இருந்தேன். ஆனால் நீ எனக்கு மரணத்தைத் தந்த பின் நீயே அவர்களைக் கண்காணித்தவனாய் இருந்தாய்"

22. ஏற்கனவே நிறைவேறிவிட்ட இரு திருக்குர்ஆன் வசனங்களைக் குறிப்பிடுக:

1) ஃபிர்அவ்ன் நீரில் மூழ்கி விட்டான் என்றும் அவனது உடல் வருங்கால சந்ததியினருக்கு ஒரு படிப்பினையாக பாதுகாத்து வைக்கப்படும் (அத்தியாயம் 1 வசனம் 91-93) என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த முன்னறிவிப்பு 1909-ம் ஆண்டு நிறைவேறி விட்டது. ஃபிர்அவ்னின் உடல் கண்டெடுக்கப்பட்டு களிம்புகள் தேய்க்கப்பட்டு வைக்கப்பட்டதன் மூலம் திருக்குர்அனின் இந்த முன்னறிவிப்பு நிறைவேறியது.



ஃபிரவ்னின் பதப்படுத்தப்பட்ட உடல் (1912 –ல் வெளியிடப்பட்ட புகைப்படம்)




2) இரு கடல்கள் இணைக்கப்படும்போது அவைகளில் முத்துக்களும், பவளங்களும் நிறைந்திருக்கும், மலைகள் போன்று உயரமான கப்பல்கள் செல்லும் என்று திருக்குர்ஆனின் 55-வது அத்தியாயத்தின் 20-25 வசனங்களில் முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. 'சூயஸ்' மற்றும் 'பனாமா' கால்வாய்கள் உருவாக்கப்பட்டதன் மூலம் நிறைவேறியுள்ளது.

23. திருக்குர்ஆனின் வெளிப்பாடுகளை உடனுக்குடன பதிவு செய்யும் 'பணியில் அமர்த்தப்பட்டிருந்த நபித்தோழர்கள் சிலரின் பெயர்களைக் கூறுக:

நபித்தோழர்களின் பெயர்கள் பின்வருமாறு

1) ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி)
2) ஹஸ்ரத் உமர் (ரலி)
3) ஹஸ்ரத் உஸ்மான் (ரலி)
4) ஹஸ்ரத் அலீ (ரலி)
5) ஹஸ்ரத் ஸெய்து பின் அவ்வாம் (ரலி)
6) ஹஸ்ரத் ஸெய்து பின் தாபித் (ரலி)
7) ஹஸ்ரத் உபய் பின் கஅப்( ரலி)

24. திருக்குர்ஆனில் கடைசியாக அருளப்பெற்ற அதிகாரம் எது?

இறுதியாக அருளப்பெற்ற அதிகாரம் 'அந்நஸ்ர்' (அதிகாரம்110) ஆகும்.

25. திருக்குர்ஆனில் இறுதியாக அருளப்பட்ட வசனம் எது?

அதிகாரம் 5-ல் 4-வது வசனம் இறுதியாக அருளப் பட்டது: "இன்று நான் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை முழுமைப்படுத்தியுள்ளேன். மேலும் உங்களுக்கு என் அருளை நிறைவு செய்துள்ளேன். மேலும் உங்களுக்கு மார்க்கமாக இஸ்லாத்தைத் தேர்வு செய்துள்ளேன்" என்பதாகும்.

(தொடரும்...)

(20 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)

இந்த காலக்கட்டம் முழுவதும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் எதிரிகள் சும்மா இருந்தனர் என்று கருதிவிடக் கூடாது. உண்மையில் அவர்களின் வெறித்தனமான தன்மை தான் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வலிமை மிக்க எழுத்துகள் இஸ்லாத்தின் எதிரிகளை மேலும் விரக்தி அடையச் செய்தது. எதிரிகள் முன்னிலும் அதிகமான வேகத்தோடும், விஷமத்தோடும் இஸ்லாத்தின் மீது தாக்குதல்களைத் தொடுத்தனர். மோசமாக பழித்துரைக்கத் துவங்கினர். பண்டிட் லேக்ராம், தக்ஸீப் பராஹீனே அஹ்மதிய்யா, நுஸ்கா கப்தே அஹ்மதிய்யா (அஹ்மதிய்யத் எனும் பைத்தியத்திற்கான வைத்தியம்) என்னும் நூல்களையும், வேறு சில பிரசுரங்களையும் வெளியிட்டார். அவர் நாட்டின் பல பகுதிகளில் ஆக்ரோஷமான உரைகளை நிகழ்த்தினார். இஸ்லாத்தின் தூய தோற்றுனர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக மோசமான அவதூறுகளைப் பரப்பினார். ஆர்ய சமாஜத்தின் சார்பில் சுர்மயே சஷ்மயே ஆர்யா கீ ஹகீகத் அவ்ர் ஃபன் ஃபரேப் குலாம் அஹ்மது கீ கைஃபிய்யத் என்ற பிரசுரம் வெளியிடப்பட்டது. ஆர்ய சமாஜத்தின் உறுப்பினரான ராவல் பிண்டியைச் சேர்ந்த பாபு பிரதாப் பகதூர் என்பவரும் பதில் எழுத முயற்சி செய்தார். இது தொடர்பாக அவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குக் கடிதம் ஒன்று எழுதினார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் அப்துல்லாஹ் சனோரி (ரலி) அவர்கள் 1887 –ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 –ஆம் தேதி அவருக்குப் பதில் எழுதினார். அதில், தனிப்பட்ட கடிதப் பரிமாற்றத்தின் மூலம் பயன் எதுவும் ஏற்படாது என்றும், பாபு தமது கருத்தை நூல் வடிவில் வெளியிட வேண்டும். அப்போதுதான் அவர் மக்கள் மத்தியில் வெளிச்சம் போட்டுக் காட்டப்படுவார் என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். 1886 –ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 –ஆம் தேதி அமிர்தசரஸின் சஷ்மயே நூர் என்னும் வெளியீட்டில் ஒரு பிரசுரம் வெளியிடப்பட்டது. அதில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மூன்று ஆண்டுகளுக்குள் கொல்லப்படுவார்கள் என மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது. 1886 –ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 –ஆம் நாள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு தபால் தலை ஒட்டப்படாத, எழுதியவர் யார் என்று பெயர் குறிப்பிடப்படாத ஒரு கடிதம் வந்தது. அதில் அவர்களை கொலை செய்து விடுவோம் என்று மிரட்டப்பட்டிருந்தது. ஆர்ய சமாஜத்தைச் சேர்ந்தவர்களிடம் பதில் எதுவும் இல்லை என்பதைக் காட்ட இது ஒன்றே போதுமான சான்றாகும்.

ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எவ்விதமான குறைந்த தாக்குதலிலும் ஈடுபடவில்லை. பதிலடி கொடுக்கும் முயற்சிகளிலும் இறங்கவில்லை. அது அவர்களின் கவனத்தைக் கவர்கின்ற தகுதியைப் பெற்றிருக்கவில்லை. அறிவுப் பூர்வமான விதத்தில் சிந்தித்தால் அவற்றிற்குப் பதிலளிக்க வேண்டிய தேவையே இல்லை. அதே நேரத்தில் ஒரேடியாக அமைதி காத்தால் அது எதிரிகளின் கை ஓங்கும் நிலை ஏற்படும் என்பதால், ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தொடர்ந்து ஆர்ய சமாஜ் நூல்களிலுள்ள முரண்பாடுகளை எடுத்துக் காட்டி வந்தார்கள்.

(தொடரும்...)



ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

“இறைவன் எனக்கு மீண்டும் மீண்டும் தெரிவித்துள்ளான். அதாவது அவன் எனக்கு மிகுந்த மகத்துவத்தை வழங்குவான். என் மீதுள்ள அன்பை உள்ளங்களில் அமரச் செய்வான். எனது இயக்கத்தை முழு பூமியிலும் பரவும்படி செய்வான். எல்லாப் பிரிவுகளின் மீதும் எனது பிரிவை வெற்றி பெறச் செய்வான். எனது பிரிவைச் சார்ந்த மக்கள் அறிவிலும் இறை ஞானத்திலும் எந்த அளவு சிறப்பினை பெறுவர் என்றால் அவர்கள் தமது உண்மையின் ஒளி மற்றும் தங்களிடம் உள்ள ஆதாரங்கள் மற்றும் அடையாளங்களின் அடிப்படையில் எல்லாரது வாயையும் அடைத்து விடுவர். மேலும் ஒவ்வொரு சமுதாயமும் இந்த நீரூற்றிலிருந்தே தண்ணீர் அருந்தும். மேலும் இந்த இயக்கம் வேகமாக வளரும்; மலரும். எதுவரையென்றால் பூமியில் முழுமையாகப் பரவி விடும்.”

(துஜல்லியாத்தே இலாஹிய்யா. ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 407)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M. Muhammad Sultan Muhiyudeen | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam